விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

கிளைகள்:- பன்னிரண்டு

ங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 19 செவ்வாய்க்கிழமை (01.02.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 44

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# அழையா விருந்தாளியாக ஜே.வி.பி. எம்.பி; நிவாரண குழுக் கூட்டத்திலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேறினர்

## அம்பாறை பிரதேச செயலகத்தில் நேற்றுச் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் குழுக் கூட்டத்தில் ஜே. வி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ச அழையா விருந்தாளியாக கலந்து கொண்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து அக் கூட்டத்தில் கலந்து கொண்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் வெளியேறினர்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## தி அமைச்சர் ஜப்பானுக்கு வார இறுதியில் செல்கிறார்

(கொழும்பு)

னாமியால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் ன் பொருளாதாரத்தை மீட்டு எடுப் த ஜப்பான் முன்வந்துள்ளது.

து. தொடர்பாக பேச்சுக்கள் நடந்த நிதியமைச்சர் எதிர்வரும் 6 ஆம் ஜப்பானுக்கு செல்லவுள்ளார்.

ண்டகால உதவி மற்றும் கடன் அடிப் பிலான நிதியுதவிகள் என்பன குறித்து ஆராயப்படவுள்ளது.

னாமியினால் பாதிக்கப்பட்ட பகுதி கு நேரில் சென்று பார்வையிட்ட ன் பிரதி வெளிவிவகார அமைச்சர் ராணிகோவா நேற்று காலை நிதி ச்சருடன் நீண்ட நேரம் பேச்சுக்களை தினார்.

அனர்த்தம் நிகழ்ந்து 10 நாட்களுக்குள் ாடி அமெரிக்க டொலர்கள் பெறுமதி உடனடி நிவாரணப் பொருட்களை வியாக வழங்க முன்வந்த முதலாவது என்ற வகையில் அந்த நாட்டிற்கு றி செலுத்த வேண்டும் என்று அமைச் மேலும் கூறினார். (த)

## பின்லாந்து அமைச்சர் இவ்வாரம் வருகிறார்

(கொழும்பு)

பின்லாந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் சனிக்கிழமை இலங் கைக்கு வருகைதரவுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களின் மீள்கட்டுமானம் தொடர்பாக நீண்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உயர் பாதுகாப்பு வலய காணிகளுக்கு பதிலாக புதிய காணிகள் வழங்கப்படும்

## உயர் நீதிமன்றுக்கு சட்டமாதிபர் கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு பகுதியிலுள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத் திற்குள் விவசாய நிலங்களை கொண்டுள் ளோருக்கு அந்த நிலங்களுக்குப் பதிலாக மாற்று காணிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்திருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரா ளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வும் மற்றுமொருவரும் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பான விசாரணையின்போதே சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றில் ஆஜரான அரசாங்கத்தின் அரச தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் உதித்த எகரகேயவா இத னைத் தெரிவித்தார்.

தமது விவசாய நிலங்களை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்

( ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு

ந்திய இராணுவ அதிகாரிகள்

# னாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க



ன இலங்கை வந்த இந்தியக் கடற் ட மற்றும் இராணுவ உயரதிகாரி ர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் வைச் சந்தித்துக் கலந்துரையாடியுள் னர்.

இச்சந்திப்பில் இந்தியப் படையினர் ற்கொண்டுவரும் புனர்வாழ்வு புன மைப்பு வேலைத்திட்டங்கள் குறித்து வர்கள் ஜனாதிபதியிடம் எடுத்துக் தினர்.

இதேவேளை இந்தியக் கடற்படை னர் ஆற்றிவரும் பணிக்கு தனது

(12 ஆம் பக்கம் பார்க்க)

வும் மற்றுமொருவரும் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள்

அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்

ஆம் பக்கம் பார்க்க)

# திருகோணமலைக் கூட்டத்தில் ஜே.வி.பி. எம்.பி. புறக்கணிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று முன் தினம் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன் றுக்கு திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் ஜே.வி.வியின் நாடாளு மன்ற உறுப்பினருமான ஜயந்த விஜய சேகர அழைக்கப்படாமைக்கு ஜே.வி.பி. அதிருப்தி வெளியிட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களைப் பார்வையிடுவதற்காக திருகோண மலைக்குச் சென்ற ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறி சேனா மாவட்டச் செயலகத்தில் கலந்துரை யாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அக் கூட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங் களில் உள்ள மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப் பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாருக்கு யார் நிதி திரட்டுகின்றனர் ன்றுமே புரியவில்லை என்கிறார் டி.யூ

(கொழும்பு)

வெளிநாட்டு உதவிகள் மீது நம்பிக்கை ண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் திட் களை தயாரிக்கக்கூடாது என அர ல் யாப்பு விவகார அமைச்சர் டி.யூ. சேகர தெரிவித்துள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்புவதாகக் கூறிக் ண்டு சில அமைப்புக்கள் அரசாங்கத் த அறிவிக்காது நிவாரணங்களை ரித்து வருவதாக அவர் குற்றம்சாட்டி யுள்ளார். நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டு உதவிகள் முழுமையாக அரச மட்டத்தில் வழங்கப்படும் உதவிகள் ஆகும். நேற்று முன்தினம் இணையத்தளம் ஒன்றில் பார்த்த விடயம் எமக்கு ஆச்ச ரியத்தை ஏற்படுத்தியது. இலங்கைக்கான சுனாமி நிவாரண நிதி சேகரிப்பதற்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய இராணுவத் தளபதியாக ஜே.ஜே.சிங் நேற்று பொறுப்பேற்பு



(புதுடில்லி)

இந்திய இராணுவத்தின் புதிய தளபதியாக ஜெனரல் ஜோகிந்த ஜஸ்வந்த்சிங் நேற்று பொறுப்பேற்றுள்ளார்.

இராணுவத் தளபதியாகவிருந்த என்.சி.விஜ் நேற்று ஓய்வு பெற்றதையடுத்து அவரின் இடத்திற்கு ஜோகிந்த நியமிக்கப் பட்டுள்ளார்.

1964 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இந்திய இராணுவத்தில் இணைந்த ஜே.ஜே.சிங்க மராட்தாலைட்ன்.`.பெண்ட்ரி பிரிவின் தளபதியாவார்.

கார்கில் போரின்போது இந்திய இராணுவத்தின் நடவடிக் கைத் தலைமையகத்தின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிவாரணம் முழுமையாகக் கிடைக்கவில்லையென கருஜெயசூரியாவிடம் திருமலை மக்கள் முறையீடு

ஐககிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

முதலில் வீரநகர், சங்கமித்த, விஜயபுரம், சிலோன் ஜெற்றி, ரிரிஏ ஜெற்றி ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

பெரும்பாலான மக்கள் தமக்கு இது வரை அரச நிவாரணம் முழுமையாக் கிடைக்கவில்லை எனக் குறை கூறினர். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தலா 5,000 ரூபா வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்த போதும் அவை இதுவரை வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

இக்குழுவில் முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம்.அஸ்வர், ஜெனரல் வீரசூரிய ஆகியோரும் அடங்கியிருந்தனர். மதியம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் காமினி ரொட்றிகோவுடனான கூட்டம் ஒன்றிலும் இக்குழுவினர் கலந்து கொணடனர். இதன்போது மக்கள் தெரிவித்த கருத்துக்கள் அங்கு முன்வைக்கப்பட்டன.

அதற்கு அரசாங்க அதிபர் பாதிக்கப்பட்ட சகல மக்களுக்கும் பிரதேச செயலாளர்கள் மூலமாக சகல நிவாரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் கூப்பன் அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன என்றார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பாதிக்கப்பட்ட மக்களுக்கான சேவைகளை கிராம சேவையாளர்கள் சரியான முறையில் வழங்குவதில்லை; சில இடங்களுக்கு அவர்கள் உரிய வேளைகளில் செல்வதுமில்லை எனக் குறை கூறினார். இவ்வாறு சேவை செய்யாத கிராம சேவையாளர்களை இடமாற்றம் செய்யும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுவதாக ஊடகங்கள் மூலமாக அறிவிக்கப்படுகின்றது. இதனை தென்பகுதி மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எமது பகுதி மக்களுக்கு இதுவரை சரியாக வழங்கப்படவில்லை. இவற்றிற்கு காரணம் அரசாங்க அதிகாரிகளின் அசமந்த போக்கே என்று குற்றம் சாட்டினார். (ப)

## நெதர்லாந்து அமைச்சரை கூட்டமைப்பினர் சந்திப்பர்

நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் பேர்னாட் பொட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை சந்தித்துப்பேசவுள்ளனர்.

கொழும்பில் உள்ள நெதர்லாந்து தூதரகத்தில் பிற்பகல் 2 மணிக்கு இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.


நெதர்லாந்து தூதுவருடனான சந்திப்பில் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன், எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பின் போது வடகிழக்குக்கான நிவாரண உதவிகள் நேரடியாக அப்பகுதிக்கு அனுபபப்பட வேண்டும் என்பதை கூட்டமைப்பினர் நெதர்லாந்து அமைச்சரிடம் வலியுறுத்தவுள்ளனர்.

இதேவேளை, 3ஆம் திகதி அதிகாலை இலங்கைவரும் நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்தராஜபக்ஷ உட்பட பலரை யும் சந்தித்துப் பேசவுள்ளார். சுனாமியினால பாதிக்கப்பட்ட சில பகுதிகளையும் சென்று பார்வையிடும் நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சர் வெள்ளிக்கிழமை மாலை நாடு திரும்பவுள்ளார். (ப)

## நோர்வே சென்றுள்ள ரணில்குழு ஒருவாரகாலம் தங்கியிருக்கும்

இலங்கையிலிருந்து நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிற்கு நோர்வே அரசாங்கத்தின் ஏற்பாட்டில் சென்றுள்ள எதிர்க் கட்சித் தலைவர் ரணில விக்கிரமசிங்க, மிலிந்த மொறகொட, அந்தரங்க செயலாளர் மகேந்திரன் ஆகியோர் நாளைய தினம் நோர்வேயில் தங்கியிருந்து பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர்.



நோர்வேயில் ஒருவாரம் தங்கியிருக்கும் இவர்கள் பலதரப்பட்ட இராஜதந்திர சந்திப்புகளையும் மேற்கொள்வதுடன் பல முக்கிய தீர்மானங்களையும் மேற்கொள்ளவுள்ளதாகவும் அறியமுடிகிறது. நோர்வேயின் எதிர்கட்சித் தலைவர், அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (ப)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவர்ரணப் பணிகளில் குறைபாடு ஆராய அதிகாரிகள் குழு விஜயம்

(கொழும்பு)

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்கவென அரசாங்கம் வழங்கியுள்ள நிதி மற்றும் நிவாரணங்கள் ஆகியன சில மக்களைச் சென்றடையவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக ஆராய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணைகயாளரினால் அரசாங்கத்தின் உயரதிகாரிகள் குழுவொனறு நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதன் படி திருகோணமலை மாவட்ட நிலைமை குறித்து ஆராய்வதற்காக இந்தக் குழுவினர் அம்மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்துள்ளனர்.

குறிப்பாக காலி, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி உதவிகள் உரியமுறையில் சென்றடையவில்லையென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த அனர்த்தத்தினால் உயிரிழந்த ஒருவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் 15 ஆயிரம் ரூபா நிதி அநேகமான குடும்பங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட வீட்டு உபகரண பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் 2 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பனவும் இவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையென இது தொடர்பாக ஆராய்ந்துவரும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளில் ஊழல் மோசடியில் ஈடுபடுவோர்க்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜா கூறினார். (ப)

## அரசாங்கத்தின் புதிய சட்ட அமுலாக்கலால் சேதம் அடைந்துள்ள பாடசாலைகளை மீள நிர்மாணிக்க முடியாத அவலநிலை

கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்கு உடபட்ட பிரதேசத்தில் கட்டிடங்கள் எதனையும நிர்மாணிக்க முடியாது என்ற அரசின் தீர்மானத்தால் சுனாமி அனர்த்தத்தின் போது முற்றாக சேதமாகியுள்ள 73 பாடசாலைகளை மீண்டும் அதே இடங்களில் நிர்மாணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தம் காரணமாக நாடு பூராவும் 176 பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன, இவற்றில் 73 பாடசாலைகள் கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்குள் அமைந்துள்ளன. வடக்கு-கிழக்கு மாகாணத்தல் மட்டும் 34 பாடசாலைகள் இவ்வாறு கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்குள் அமைந்துள்ளது.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் இப்பாடசாலைகளை அதே இடத்தில் அமைப்பதற்கு அனுமதியளிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளது. அதே நேரம் இப்பாடசாலைகளை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு பொருத்தமான காணிகளையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையுமுள்ளது. இதன் காரணமாக கல்வி அமைச்சும், மாகாணக் கல்வி அமைச்சும், பல சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன.

மீனவர் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளை பெரும்பான்மையாகக் கொண்ட இப் பாடசாலைகளை வேறு தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்வதால் இம்மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப் படுகின்றது. (ப)

## இராசிபலன்

**01.02.2005**
**(தை 19 செவ்வாய்க்கிழமை)**
**சப்தமி- முன்னிரவு 09.12 மணிவரை**
**சித்திரை - மு.ப 10.05 மணிவரை**
**இராகுகாலம் 03.36 - 5.06 மணிவரை**
**சுபநேரம் 11.06 -12.36 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | குடும்ப மகிழ்ச்சி, எடுத்த கருமங் கள் கைகூடும், பெருமையடைதல், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | தேக ஆரோக்கியம், பகைவர் நேசம், முயற்சி கைகூடும், தொழில் நன்மை. |
| மிதுனம் | வியாபார சிந்தை, சிறுவியாதி, கௌரவக் குறைவு, காரிய தாமதம். |
| கடகம் | உடல் நலக் குறைவு, தனவிரயம், மனச் சஞ்சலம், காரிய இடையூறு |
| சிங்கம் | மனோதைரியம், நற்கீர்த்தி, மாதர் நட்பு, எடுத்த காரியம் கைகூடும். |
| கன்னி | அதிக செலவு, சங்கடமான நிலை, போசன சுகக் குறைவு, முயற்சி தாமதம். |
| துலாம் | பெரியோர் சந்திப்பு, தேக நலன், சயன சுகம், தொழில் சிந்தை. |
| விருச்சிகம் | காரிய அலைச்சல், திடீர் நன்மை, சயன சுகக் குறைவு, தனவிரயம். |
| தனுசு | கீர்த்தி, மனமகிழ்ச்சி, சகோதரர் உதவி, காரிய அனுகூலம். |
| மகரம் | நிலை மாற்றம், சுப நிகழ்வு, புதிய தகவல், தொழில் நன்மை. |
| கும்பம் | புதிய திட்டமிடல், பிதா சிந்தை, பிரயாணம், காரிய தாமதம். |
| மீனம் | உறவினர் வெறுப்பு, தனவிரயம், வேலைச் சுமை, காரிய தடங்கல். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்**

## சுனாமியால் பாதிக்கப்பட்டிருப்பின் இடம் பெயர் சேவையாளரின் குடும்பங்களுக்கு உதவத் திட்டம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் உடமைகள் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராய சர்வதேச இடம்பெயர் சேவையாளர் அமைப்பினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இநதக் குழுவினருடன் தொழில் அமைசசர் அதாவுட செனவிரட்ன நர்ளை விசேட பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபடவுள்ளார்.

வெளிநாட்டு வேலை வர்ய்ப்பை பெற்றுச் சென்றுள்ள இலங்கையர்களின் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பின் அவர்களுக்கு உதவக்கூடிய வழிவகைகள் குறித்து இதன்போது ஆராயப்படுமென தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரட்ன கூறினார்.

வெளிநாடுகளில் தொழில் புரிவோரில் ஆழிப்பேரலை தாக்கத்தினால் உடமைகளை இழந்த குடும்பங்கள் குறித்து தகவல் திரட்டும் நடவடிக்கை ஓரளவு பூர்த்தியடைந்துள்ளதாகத் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை 4 ஆயிரம் குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த தொழில அமைச்சர் அதாவுடன செனவிரட்ன இவர்கள் தொடர்பான விபரங்களை பிரதேச செயலாளர்க்ள் ஊடாக தொடர்ந்தும் திரட்டி வருவதாகவும் கூறினார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சர்வதேச இடம்பெயர் சேவையாளர் அமைப்பு டன் இணைந்து நிதியுதவி வழங்க கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ப)

நியூ றீகல் சினிமாஸ்
சங்கானை
பார்த்தீபன், நீச்சாபலட்
வடிவேல் மற்றும் பலர் நடித்த
காதல் கிறுக்கன்
கா.நே -11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ்
யாழ்ப்பாணம் (குளிரூட்டியது)
சத்தியராஜ், மும்தாஜ், மற்றும் பலர் நடித்த
மகாநடிகன்
தினசரி 4 காட்சிகள்
10.30,2.30,6.30,9.30 (பு.நே)

மலையாள மாந்திரீகம்
திரு. V. குமரனின் மலையாள மாந்திரீகத்தில் அநேக நன்மைகள், தீராத நோய்கள், திருமணத் தடைகள், தொழில் பிரச்சினைகள், வியாபார ஸ்தானத்தில் பிரச்சினைகள் போன்றவற்றிற்கு உங்கள் பெயர், நட்சத்திரம் ஆகியவற்றை சொன்னால் உங்கள் வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்படும். தீய காரியங்களுக்கு இடமில்லை.
தொடர்பு:- 0776-536622
(9253)

# இன்று ஒரு தகவல்

## தன்வினை தன்னைச்சுடும்

"ஸ்வயங் கிருத அபராதம்" என்றால் என்னனென்று தெரியுமா உங்களுக்கு? நாம் செய்யும் ஒரு தவறு நமக்கே இடைஞ்சலாக வந்து முடிவதுண்டு. இதை விளக்குவதற்காக மாயூரம் வேதநாயகம் பிள்ளை வேடிக்கையாக ஒரு கதை சொல்லியிருக்கிறார். அவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நாவலில் இது வருகிறது.

ஒரு கணவன் மனைவிக்கிடையில் எப்போது பார்த்தாலும் ஏதாவது சண்டை வந்து கொண்டேயிருக்கும். அடிக்கடி ஒருத்தரையொருத்தர் திட்டிக் கொண்டேயிருப்பார்கள். அப்படி ஒரு நாள் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அவன் அவளைப் பார்த்து "உன்னைப் பழிவாங்குகிறேன் பார்" என்றான்.

"எப்படிப் பழிவாங்குவாய்?" என்று கேட்டாள் மனைவி "கொல்லையில் ஒருபெரிய ஆழமான குளம் இருக்கிறதல்லவா? அதில்" என்று ஆரம்பித்தான். "அதில்?" என்று அதட்டினாள் மனைவி. "அதில் நான்போய் விழுந்துவிடுவேன்" என்று முடித்தான் கணவன். அப்படியும் மனைவி விடவில்லை. நீ அந்தக் குளத்தில் விழுவதை நான் என் கண்ணால் பார்க்கவேண்டும். அதை இப்போதே செய். வா என்று கூறி அவனை இழுத்துச் சென்றாள். இவனும் பலி ஆடுமாதிரி பின்னால் செல்கிறான்.

குளம் வந்தது "இதோ இருக்கிறது நீ சொன்ன குளம் இதில் குதித்துவிடு" என்றாள். இவனும் குதிப்பதற்குத் தயாரானான். தூரப் போய் நின்று அங்கிருந்து வேகமாக ஓடி வந்து அந்த ஆழமான குளத்தில் பொத் என்று விழ வேண்டும். அவன் அதற்காக தூரத்தில் போய் நின்றான். ஒருவிநாடி யோசித்தான். அதன் பின்பு வேகமாக ஓடிவந்தான். குளத்தின் அருகே வந்ததும் அப்படியே நின்று விட்டான் குதிக்கவில்லை.

மனைவி சும்மா இருப்பாளா? "ஏன் குளத்தில் விழவில்லை?" என்று சத்தமிட ஆரம்பித்தாள். இவன் மெதுவாகச் சொன்னான் " அதுவந்து... வேறு ஒன்றுமில்லை. எனக்கு நீந்தத் தெரியும். அதனால் நான் குளத்தில் குதித்ததும் நீந்திக் கரைக்கு வந்தாலும் வந்து விடுவேன். நான் தப்பித்து வராத அளவுக்கு நீதான் எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும். அதாவது எனது இரண்டு கைகளையும் நீ பின்னால் சேர்த்துக்கட்டிவிடு. அதன் பின்பு நான் நந்த வேண்டுமென்று நினைத்தாலும் அதுமுடியாதே" என்றான்.

அதுவும் நல்ல யோசனைதான் என்று நினைத்தாள் மனைவி. அதேபோல் அவனைக் குளத்தின் ஓரமாக நிறக வைத்து கைகளிரண்டையும் பின்பக்கமாகச் சேர்த்துக் கட்டி விட்டாள். இப் போது எப்படி ஏற்பாடு என்றால் அந்த ஆள் குளத்தின் ஓரமாக நிற்கவேண்டியது. அவள் தூரத்திலிருந்து வேகமாக ஓடி வந்து அவனைத் தள்ளி விட வேண்டியது.

அவன் குளத்தின் ஓரமாக நின்று கொண்டான். மனைவி தூரத்திலிருந்து வேகமாக ஓடி வந்தாள் அவனைப் பிடித்துத் தள்ளி விடுதவற்கு. அருகில் வந்ததும் திடீரென்று அவன் விலகிக் கொண்டான். ஓடிவந்த வேகத்தில் அவளால் திடீரென்று பிரேக் போட முடியவில்லை. நேராக ஓடி வந்து குளத்தில் எழுந்து விட்டாள். விழுந்தும் தண்ணீரில் கையையும், காலையும் அடித்துக்கொண்டு ஆ! ஊ வென்று கத்தினாள் ஐயோ! என்னை கைது துக்கிவிடுங்களேன்... கரையில் சேருங்களேன்... காப்பாற்றுங்களேன் என்று கத்தினாள். கரையில் நின்று கொண்டிருந்த அவளது கணவன் மிக நிதானமாக யோசித்தான் "நான் என்ன செய்வது? உன்னைக்காப்பாற்ற வேண்டும் என்று தான் நினைக்கிறேன் இருந்தாலும் அது முடியாது. ஏனென்றால் நீ தானே கையை பின்னால் கட்டிவிட்டாய்? இப்போது நான் என்ன செய்ய முடியும்? என்று சொல்லி விட்டான் .இது தான் ஸ்வயங்கிருத அபராதம் என்பது.

இந்தக் காலத்திலெல்லாம் கணவன் மனைவிக்கிடையில் தகராறு என்றால் யாரும் குளத்தைத் தேடிக் கொண்டு போவதில்லை. நேராக நீதிமன்றம் சென்று விடுவார்கள். ஒருவர் அப்படித்தான் நீதிமன்றம் சென்றார். 'என் மனைவியுடன் குடும்பம் நடத்த முடியாது விவாகரத்து வேண்டும்' என்று மனு கொடுத்தான். விசாரணை வந்தது.

அரசாங்க வக்கீல் கேட்டார் ஏன் சார் உங்கள் மனைவி கோபக்காரா? என்று, இல்லை என்றான் இவன். அவர் ஊதாரித்தனமாக செலவழிப்பாரா? என்றார். இல்லை" என்றான். அவர் நிறையப் பொய் சொல்வாரா? என்றார் இல்லை என்றான். அவர் உங்களை மதிப்பது இல்லையா? என்றார். வக்கீல். அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை என்றான் இவன். "அப்படி இருக்கையில் ஏன் விவாகரத்து கேட்கிறீர்கள்? என்றார் அவர்.இவன் மெதுவாக நீங்கள் கேட்ட அத்தனை குறைகளும் என்னிடம் உள்ளது. அத்னால் தான் கேட்கிறேன் என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசை விட்டு விலகிச் செல்ல ஜே.வி.பி யினர் தீர்மானம்!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பி. கட்சியினருக்கும் இடையே தேர்தல் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைக்கு மதிப்பளிக்காத சந்திரிகாவின் தலையிலான அரசில் இருந்து விலக ஜே.வி. பி கட்சியின் மத்திய குழு முடிவெடுத்திருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தானதோன்றித்தனமாக எடுக்கும் முடிவுகளுக்கு ஜே.வி.பி. ஒருபோதும் ஒத்துழைக்கப் போவதில்லை எனவும் இது பற்றி விரைவில் பொது மக்களுக்கு அறிவிக்கவும் ஜே.வி.பி மத்திய குழு தீர்மானித்துள்ளது.

கடந்த புதன்கிழமை இது பற்றி ஊடகங்களுக்கு தெரிவிக்க ஜே.வி.பி முடிவெடுத்திருந்த போதும் பின்னர் அது கைவிடப்பட்டது.



எனினும் அக்கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஊடகங்களுக்கான அறிவித்தலை விரைவில் வெளியிட முடிவெடுத்திருப்பதாகவும் இவ்வாறான ஒரு பத்திரிகையாளர் மகாநாடு சந்திரிகா ஆட்சி அமைக் கப்பட்ட 9 மாதங்களில் ஜே. வி. பியினால் கூட்டப்படும் முதலாவது மகாநாடாகவும் இருக்கும் எனவும் தெரிய வருகினறது.

அண்மைக் காலங்களில் ஆழிப்பேரலையின் நிவாரண நடவடிக்கைளில அரசு கையாளும் முறைகளை வன்மையாகக் கண்டித்துவருவதும் அரசினால் நிவாரண நடவடிக்கைகளுக்கென ஏற்படுத்தப்பட்ட உயர் மட்டக்குழுவில் விடுதலைப்புலிகளின் பங்களிப்பினை எதிர்த்துவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப)

# வன்னிப் பகுதிகளுக்கென அனுப்பி வைக்கப்பட்ட இத்தாலிய மருத்துவ உபகரணங்கள் கட்டுநாயக்காவில் தடுத்து வைப்பு

(கொழும்பு)

இத்தாலி அரசாங்கத்தால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பயன்பாட்டுக்கென அனுப்பி வைக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் ஸ்ரீலங்காப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

மருந்துப் பொருட்களை வன்னிக்கு கொண்டு செல்ல இத்தாலிய அரச அதிகாரிகள் முயன்றதை அடுத்து, இவை தடுத்து வைக்கப்பட்டதாக இணையத்தள செய்தி ஒன்று கூறுகின்றது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வன்னிக்கு இத்தாலிய அரசாங்கப் பிரதிநிதிகளால் அனுப்பப்படவிருந்த 10 அம்புலன்ஸ் வண்டிகளும் அறுவைச்சிகிச்சைகளை மேற்கொள்ளும் நடமாடும் ஆய்வுகூடம் ஒன்றும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளால் கொழும்பு விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் அனுமதியின்றி எந்தவொரு பொருட்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கோ, அன்றி விடுதலைப்புலிகளுக்கோ வெளிநாட்டில் இருந்து நேரடியாக அனுப்ப முடியாது என ஏற்கனவே அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் எங்கு அவசியம் தேவைப்படுகின்றதோ அங்கு அனுப்பும் விடயத்தை அரச தரப்பினர் ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இது போன்ற பொருட்கள் கடந்த 31ஆம் திகதி அரசாங்கத்தின் அனுமதி பொறாது இத்தாலிய நாட்டின் அதிகாரிகளால் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்ட சம்பவத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டியதாக மேலும் இணையத்தளம் கூறுகின்றது. (ப)

## வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

ஜி.சி.ஈ. சாதாரண தர மற்றும் உயர் தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கென வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

அரசாங்க வங்கிகளுக்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தாதிமார்கள் சேவைக்கு ஐயாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தேசிய பாடசாலைகளில் இரண்டாயிரம் கல்வி சாரா ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். (ச)

## ஐ. நா. அகதிகள் பணிப்பாளர் விஜயம்

(மட்டக்களப்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் நாயகம் பிறைசன்ற் மக்கிலன்ட் நேற்று முன்தினம் காலை மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டார்.

மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்ட அவர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியிருக்கும் ஒந்தாச்சி மடம் நலன்புரி நிலையத்திற்கு சென்று பார்வையிட்டதுடன்,மக்களின் குறை நிறைகளையும் கேட்டறிந்தும் கொண்டார். (த-8)

## 5 கைக்குண்டுகளுடன் நான்கு பேர் கைது

(கொழும்பு)

அம்பா[illegible] பகுதியில் கடந்தசனிக்கிழமை 5 கைக்குண்டுகளுடன் கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் எ[illegible]வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டி ஒன்றை வழி மறித்து சோதனை செயத போதே இவர்கள் கைக்குண்டுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கைக்குண்டுகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (த-8)

# 100 மீற்றருக்கு அப்பால் வீடுகள் ஸ்ரீ. சுதந்திரக் கட்சி பிடிவாதம் ஜே.வி.பி. அதற்கு எதிர்மாறு

(கொழும்பு)

கரையோரப் பிரதேசத்தில் 100 மீற்றருக்கு அப்பால் வீடுகளை அமைக்கும் கொள்கையை எதிர்ப்பது என்று ஜே.வி.பி தீர்மானித்துள்ளது. 100 மீற்றருக்குள்ளேயே மக்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதிலும் ஜே. வி.பி. மும்மரமாக ஈடுபட்டுள்ளது.

மேலும் சிரேஷ்ட ஜே.வி.பி தலைவர்கள் பலர் சுனாமியால பாதிக்கப் பட்ட பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து கரையோரத்தில் மக்கள் வீடமைப்பு மேற்கொள்வதை ஊக்குவித்தும் வருகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்தே அரசின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே முரண்பாடுகள் வலுத்துள்ளன. 100 மீற்றருக்குள் கட்டடங்கள் அமைக்கப்படக்கூடாது என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினது கொள்கை. இது நடைமுறை சாத்தியமற்றது என ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத் தலைவர் சமரநாயக்க தெரிவிக்கையில், சட்டப்படி 300மீற்றர்களுக்குள் கட்டடங்கள் அமைக்கப்படக்கூடாது. 100 மீற்றா என்பது பாராட்டத்தக்கது. கட்டாயம் 100 மீற்றர் திட்டம் அமுல்படுத்தப்படல்வேண்டும் என்றார்.

இதேவேளை, கரையோரப் பாதுகாப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. 100மீற்றர் திட்டம் நிச்சயம் அமுல்படுத்தப் படல் வேண்டும் என நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார். (கு-6)

# மீள் கட்டுமானப் பணிகளுக்கான சர்வதேச உதவிகளை விடுதலைப் புலிகளின் கையில் கொடுக்கமாட்டோம்

## அடித்துக் கூறுகிறார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

**ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களின் நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காகச் சர்வதேச சமூகம் வழங்கும் உதவுதொகை விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக வழங்கப்படவே மாட்டாது.**



இப்படி அடித்துக் கூறியிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

"த ஹிண்டு" பத்திரிகையின் கொழும்பு செய்தியாளர் வி.சம்பந்தனுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அப்பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

***கேள்வி:-*** நிதி நேரடியாகத் தங்களுக்கு அனுப்பப்பட வேண்டும் எனப் புலிகள் கோருகின்றார்கள் என்று செய்திகள் வெளியாகியுள்ளனவே. அத்தகைய கோரிக்கை ஏதும் வந்தால் அரசின் பதில் என்னவாக இருக்கும்?

**பதில்:-** புலிகள் அரசிடம் இதுவரை எழுப்பியிருக்கும் விடயங்களில் நிதி தங்களுக்கு நேரடியாக அனுப்பப்படவேண்டும் என்ற விவகாரம் அடங்கியிருக்கவில்லை.

நிதி புலிகளுக்கு நேரடியாக வழங்கப்பட முடியாது என்பதே அரசினதும் சர்வதேச உதவும் சமூகத்தினதும் நிலைப்பாடாக இருந்து வந்துள்ளது.

களத்தில் திட்டங்களைச் செயற்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளே இதுவரை எதிர்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அரசுக்கு உத்தியோக பூர்வமாக வரும் நிதி, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கும் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவது தொடர்பில் ஒரு சீரான வழிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

இத்தகைய திட்டங்களை அரசு அங்கு நேரடியாகச் சென்று நடைமுறைப்படுத்த முடியாது என்ற நிலைமை கடந்த சில வருடங்களாக அங்கு நீடிப்பதே இதற்குக் காரணம்.

இதுதான் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய யதார்த்த நிலை.

எனவே, இரண்டு அடிப்படைகளைச் சமநிலைப்படுத்தும் ஒரு முயற்சியில் அரசும்-புலிகள் அமைப்பும் உதவும் நாடுகளும் ஈடுபட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

ஒன்று - நிதி நேரடியாக - முற்றும் முழுவதாக - புலிகளிடம் ஒப்படைக்கப்பட முடியாது.

அதேசமயம், புலிகளின் பிரதேசத்தில் அரசின் திட்டங்களைச் செயற்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க கட்டமைப்பு அவசியம் இதுவே செய்யப்படவேண்டியதாகும்.

***கேள்வி:-*** இது தொடர்பான செயற்றிட்டத்தைத் தெளிவுபடுத்துவீர்களா?

**பதில:-** திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கான விடயங்களைக் கையாள்வதற்கு அரசு-புலிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புகளின் பங்களிப்புடன் கூடிய ஏதோ ஒரு வகைக் கட்டமைப்பு மத்தியில் தேவை. அதேபோன்ற தரப்புகளின் பங்குபற்றலுடன் களத்தில் பணியாற்றுவதற்குப் பிரதேச மற்றும் மாவட்டக் கட்டமைப்புகளும் கட்டாயம் அவசியம்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்று கூறப்படும் பகுதிகளில் கூட புலிகள்-அரசு ஆகியவற்றுக்கு அப்பால் ஏனையோரின் பிரதிநிதித்துவமும் அதில் அவசியம். குறிப்பாக, முஸலிம்கள் தரப்பு மற்றும் சர்வதேச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவையும் இதில் அடங்கும்.

அதாவது பரந்த - விசாலமான - பலரையும் உள்ளடக்கிய - பிரதிநிதித்துவம் அதில் அவசியம்.

இந்த ஏற்பாடு, வெறுமனே அரசையும் புலிகளையும் மட்டும் கொண்டதாக இருக்க முடியாது. அதைவிட விசாலமாக அது அமைய வேண்டும். திறமையாக அந்தக் கட்டமைப்பு இயங்கக்கூடியதாக அது விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றார் கதிர்காமர். (ப)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பாதிக்கப்பட்டோர்க்கு உதவி

### 300 குடும்பங்களுக்கு சமையல் உபகரணங்களை வழங்கும்

(யாழ்ப்பாணம்)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டு வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் தங்கியிருந்து இடைத்தங்கல் முகாமுக்கு செல்லும் 300 குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உடனடித்தேவையாக உள்ள சமையல்பாத்திரங்களை வழங்கவுள்ளது.

பகுதி பகுதியாக மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களை இனங்கண்டு இவ் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக தும்பளைக் கிழக்கு உதயசூரியன் கடற்றொழிலாளர்கள் சங்கத்துக்கு உட்பட்ட 84 குடும்பங்களுக்கு இப்பொருட்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

இதில் 14 வகையான உடனடித்தேவை சமையல் பாத்திரங்கள் அடங்கும். (ப)

# அவலமான நேரத்தில் அநாகரிக அரசியல்

இலங்கை அரசாங்கத்தினதும், ஜனாதிபதியினதும் அறிவிப்புக்களிலும் சரி, செயற்



பாடுகளிலும் சரி, இன்றைய அவலமும் நெருக்கடிகளும் சூழ்ந்த நிலையிலும் கூட நேர்மையோ, உறுதியோ, மனிதநேயத்தை வெளிப்படுத்தும் பண்போ இல்லாமல் இருப்பதுதான் கவலையையும், அருவருப்பையும் ஊட்டும் விடயமாகும். ஒவ்வொரு நாளும் அரசு தரப்பிலிருந்து ஒவ்வொருவர் வெளியிடும் அறிக்



கைகளை நோக்கும்போதுதான் ஆட்சிப் பீடத்தவரின் நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்று மூலோபாயங்களும், எந்தளவுக்கு அரசியல் உள் நோக்கங்களைக் கொண்டிருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் சின்னாபின்னப் பட்டுப்போயிருக்கும் நாட்டின் கரையோரப் பிரதேசங்களையும், அந்தப் பகுதிகளில் வாழும் மக்களையும், புனரமைத்து அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்க வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ள அரசாங்கம், அனர்த்தம் நிகழ்ந்து ஒரு மாதத்திற்கும் மேலாகிவிட்ட நிலையில், அதற்கான செயற்பாடுகளில் முழுமையாக இயங்காது பாரபட்சமான அணுகுமுறைகளையே இன்னமும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதுடன், சர்வதேச சமூகம் அள்ளிவழங்கும் நிவாரண மற்றும் நிதியுதவிகளைப் பயன்படுத்தி எத்தகைய அரசியல் ஆதாயங்களைப் பெற முடியும் என்று கள்ளக்கணக்குத் திட்டங்களை ஆராய்ந்து வருவதிலும் நாளுக்கு நாள் முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளை விட்டு மக்களை ஏமாற்றுவதிலும் காலத்தைக் கடத்தி வருகிறதை தொடர்வதுதான் அரசியல் அநாகரிகமாகும்.

இந்த வாரத்தில் ஜனாதிபதி செயலகம் சாரபில் ஹரீம் பீரிஸ் ஒரு அறிக்கையை விட்டார். பின்னர் விமல் வீரவன்ச மற்றும் சோமவன்ச அமரசிங்க ஆகிய ஜே.வி.பி. பிரமுகர்கள் அதற்கு முற்றிலும் எதிரான அறிக்கையை விட்டார்கள், கடைசியாக கதிர்காமர் தனது வழமையான பல்லவியை அறிக்கையாக்கி விட்டுள்ளார்.

எல்லாருடைய அறிக்கைகளும் சுனாமி நிதியை எவ்வாறு பெறுவது என்றும், எப்படி அதைப் பங்கீடு செய்வது என்பது குறித்ததாகவே இருந்தது.

முதலில் அரசும் புலிகளும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் செயற்படுவது குறித்து தீவிரமாக அரசமட்டத்தில் ஆராய்வதாக ஜனாதிபதி பக்கமிருந்து வெளியான செய்திகள் சற்று நம்பிக்கை தரும் வகையில் அமைந்திருந்தன.


ஆனால் அதனையடுத்து அரசினது பங்காளியும், ஜனாதிபதியின் தோழர்களுமான ஜே.வி.பியினர் சார்பில் வெளியான அறிவிப்புக்களில், விமல் வீரவன்சவும், சோமவன்ச அமரசிங்கவும் நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளை இணைத்தால் தாம் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை நிறுத்து வது குறித்துப் பரீசிலிக்க வேண்டிய நிர்ப் பந்தம் ஏற்படும் என அரசை எச்சரிக்கும் அல் லது மிரட்டும் தொனியில் வார்த்தைகள் இடம் பெற்றிருந்ததைப் பார்த்தபோது முதற் செய்தியால் ஏற்பட்ட நம்பிக்கை மக்கள் மத்தியில் தளரத் தொடங்கியது.

கடைசியாக அந்த வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளியிட்டுள்ள அறிக்கை எல்லாவற்றிலும் நம்பிக்கை இழக்க வைத்துள்ளதுடன் ஜனாதிபதியோ, அவரின் கீழான அரசாங்கமோ எந்தக்காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் மனிதநேய அடிப் படையில் எந்தப் பிரச்சினையையும் அணு கும் மனோபலத்துடன் செயற்படும் பண்பு கொண்டதாக இருக்கப் போவதில்லை என்ற செய்தியை ஓங்கி ஒலிப்ப



தாகியுள்ளது.

நிவாரணப் பணிகளை இணைந்து மேற்கொள்ளும் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் எந்த உடன்பாடும் இல்லையென்று அறிவித்துள்ள கதிர்காமர் - சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மக் களுக்கு சர்வதேச சமூகம் வழங்கும் நிவாரண மற்றும் நிதியுதவிகளைப் பகிர்ந்தளிப்பதில் விடுதலைப் புலிகள் நேரடியாகப் பங்குபற்ற அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளதன் மூலம், முருங்கை மரத்தில் ஏறிய வேதாளம் எந்தக் கட்டத்திலும் இறங்கப்போவது கிடையாது என்ற அரசின் பேரினவாதப் பண்பு இன்னமும் எந்தவித மாற்றமுமின்றி அப்படி



யேதான் உள்ளது என்பதை உறுதிசெய்துள்ளார் என்றே கூறமுடியும்.

அதுமட்டுமல்ல தங்கள் மீது இது தொடர்பாக சர்வதேச அழுத்தம் ஒன்று ஏற்பட்டுள்ளதை, சிலவேளைகளில் நமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கப்பால் நாம் விரும்பாதவர் களுடனும் இணைந்து செயற்பட வேண்டிய நிர்ப்பந்தம் உள் ளது என்று கூறியதன் மூலம் ஒப்புக்கொண்டுள்ளார்.

அதாவது இணைந்து செயற்படவேண்டிய ஒரு சூழல் ஏற்படின் தாம் விருப்பமில்லாமல், ஒரு கொள்கை அல்லது கடமையின் அடிப்படையிலின்றி சும்மா வேண்டா வெறுப்பாகச் செயற்படவேண்டிவரும் என்பதையே அவர் கோடிட்டுக்காட்டியுள்ளார்.

ஆக அரசு அவலப்படும் - பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேச தமிழ்மக்களுக்குரிய புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளில் இதய சுத்தியுடன் சர்வதேச உதவிகளில் எந்தப் பங்கினையும் வழங்கப்போவதில்லை என்ற செய்தியையே கதிர்காமர் தனது அறிக்கையில் பிரகடனம் செய்துள்ளார்.

நிர்ப்பந்தங்கள் மத்தியில் மக்களுக்கு எந்த உதவிகளையும் நீதியான முறையில் அரசு பங்கீடு செய்யப் போவது கிடையாது என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்வது இக்கட்டத்தில் அவசியமாகும்.

***(நன்றி இணையம்)***

# கண்ணீர் வடியுங்கள்



மனிதனின் மகத்தான குணங்களில் ஒன்று அழுகை. அது அவனது பிறப்புரிமையும். அவசியத் தேவையுமாகும். மனிதன் தனது இயலாமையை வெளிபபடுத்தும் நெருக்கடியான சூழல் வரும்போது கடைசியாகப் பயன்படுத்தி எதிராளியை அடிபணியச் செய்கிற சக்தி வாய்ந்த ஒரே ஆயுதம் கண்ணீா மட்டுமே!

கண்ணீர் வடிப்பவர்கள் ஏழைகள் என்றே எல்லோரும் கூறுவதும், நினைப்பதும் உண்டு. ஆனால் அப்படி நினைப்பது தவறாகும். உலகில் எல்லோருமே கண்ணீர் வடிக்கவேண்டியது அவசியமாகும். ஏனெனில் ஒவ்வொருவரது கண்களின் பாதுகாப்பிற்கும் கண்ணீர் தான் மூலகாரணமாகும்.

எப்படியெனில் கண்களில வரும் கண்ணீர் தான் கண்களின் மேல் முன்பாகத்தில் கண்ணாடி போல மூடிக்கொண்டிருக்கும் சவ்வைக் காய்ந்துவிடாமற் பாதுகாப்பதாகும். கண்களில் நீரில்லாது காய்ந்து விடுமாயின் கண்பார்வையையே நாமிழந்து குருடராகி விடுவோம்.

வாழ்வில் நாம் முதல் முதலாக அழுததை நினைத்துப் பார்த்ததுண்டா? பிறந்து வீழ்வதே அழுது கொண்டுதானே. அதாவது தாயின் கருவறைச் சுவர்க்கம் இழந்து, இந்தப் பு,லோக நரகத்திற்கு வந்த துக்கத்தில் வரும் முதல் அழுகை இது.

'அழாமல் பிறந்த குழநதை நீண்ட ஆயுளோடு வாழாது' என்ற பழமொழிக்கேற்ப மனித வாழ்க்கையின் தொடக்கமே கண்ணீர் கொண்டுதான் நிகழ்கிறது என்பது கண்ணீரின் தனிச்சிறப்பு.

சிலரைப் பார்த்தால் அழுவதற்கென்றே பிறந்தவர்கள் போல் தெரியும். இவர் கண்ணீரின் சாகாத சாட்சிகள். அவர்களைத் 'தொட்டாச் சிணுங்கிகள்' என்று எம்மவர் கேலி செய்யக்கூடும். ஆனால் கணணீரின் சில்லுக் கணங்களில் மூடி வைத்திருக்கும் லாவண்யம் தான் அவர்களது வாழ்க்கை என்பது கேலி செய்கிறவர்களுக்குத் தெரியாது போலும்.

அழுவது ஒரு கலை என்று சொல்பவர்களும் உண்டு. சிலர் அதிகம் அழுவர். சிலர் அழவே மாட்டார்கள். இன்னும் சிலர் காரியங்களைச் சாதிக்கவும், ஏமாற்றவுமே அன்றி அழுவதில்லை. சிரித்து சிரித்து ஏமாற்றுவது மாதிரி, அழுதழுது காரியங்களைச் சாதித்து விடுவர்.

துயரங்களை எளிதில் மறக்க நினைப்பவர்கள், கண்ணீர் புன்னகையின் மறுபக்கம் என்பதைத் தெரிந்துகொண்டவர்கள். விளைச்சலுக்கு முன் மழை அவசியம் என்பது மாதிரி சிரிக்க வேண்டுமானால் கொஞ்சம் அழுது பழக்கப்பட வேண்டும். கண்ணீரையும், புன்னகையையும் பற்றி கவிக்கோ அப்துல் ரஹ்மான் என்ன சொல்கிறார் தெரியுமா?

'கண்ணீர் கண்களின் புன்னகை! புன்னகை இதழ்களின் கண்ணீர்! மேலும் கண்ணீர்தான் உன்னைக் காட்டுகிறது. புன்னகை சில நேரங்களில் உனக்குத் திரையாகி விடுகின்றது'.

'உன்னோடு சேர்ந்து சிரித்தவனை நீ மறக்கலாம். ஆனால் உன்னோடு சேர்ந்து அழுதவனை உனனால் ஒருபோதும் மறக்க முடியாது' என்கிறார் கவிஞர் கலீல் ஜிப்ரான்.

வாழ்வியல் அடிப்படையில் பார்த்தால் ஆண் வேதனைகளை தனக்குள்ளேயே புதைத்து விடுகின்றான். ஆனால் பெண் அப்படியல்ல. கதறி அழுது விடுவாள். சங்கடம் வரும் போது வெளியே சொல்ல முடியாத வேதனைகளை பல்லால் கடித்துக் கொண்டு உள்ளுக்குள்ளேயே அழுது விடுவாள்.

உண்மையில் உள்ளம் உடைந்து கதறி அழுவது என்பது மனிதனின் தேவையும் பிறப்புரிமையும் ஆகும். அப்படி அழுவது ஒருபோதும் பலவீனத்தின் அடையாளமல்ல. நாலுபேருக்கு முன்னால் அழுகின்ற ஆண்களை 'என்ன பெண் போல அழுகின்றாய்' என்றும் சமூகம் பரிகசிப்பதுண்டு. அப்படியல்ல. மனதுவிட்டு அழத்தோன்றும் போது யாராக இருந்தாலும் அழுது விடுவதுதான் நல்லது.

துக்கங்களை ஒருபோதும் மனதுக்குள் புதைத்து வைக்காதீர்கள். அழுவதால் உடல் மற்றும் மனரீதியான பல்வேறு தாக்கங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.


உலகத்தில் அதிகம் அழும் ஆண்கள் இத்தாலியர்கள். பெண்கள பெல்ஜியம் நாட்டவர்கள். எப்போதாவது அழுகிறவர்கள் பல்கேரிய நாட்டு ஆண்களும், நைஜீரியா நாட்டுப் பெண்களும்தான் என்கிறது ஓர் ஆய்வு.

கண்ணில் சேரும் தூசுகளையும், அழுக்கையும் கழுவி சுத்தப் படுத்தும் விஷயத்தல் கண்ணீரை விடச் சிறந்த மருந்து வேறில்லை என்கின்றனர் மருத்துவர்கள.

* * *

## இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 46

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



நகைச்சுவை நடிகர்களில் தற்போது நம்பர் வண்ணாகத் திகழும் இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 07ஆம் திகதிக்கு முன்ன் கிடைக் கக்கூடிய தாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**<br>
**போட்டி இல:- 46**<br>
**வலம்புரி ~ சங்குநாதம்**<br>
**இல:- 15, வெள்ளாந்தெரு,**<br>
**வண்ணார்பண்ணை,**<br>
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல்முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-46**

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-...................... |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-...................... |
| அனுப்புபவரின் முகவரி | :-...................... |
| | ...................... |
| | ...................... |

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 44 சரியான விடை**





**எஸ்.ஜே.சூர்யா**

**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 44இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | |
|---|---|
| முதற் பரிசு | :~தி.ஜதுஸா, சக்கலாவோடை, காரைநகர். |
| இரண்டாம் பரிசு | :~த.விஜயரத்தினம், பொன்னாலை வீதி, சங்கானை. |
| மூன்றாம் பரிசு | 'சிவரூபன் ஜெயருக்ஷன், இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

K.இராஜகோபால், தொல்புரம். ம.தருணி, யாழ்ப்பாணம். மு.பிறேமினி, மானிப்பாய். சூ.யோ.மரியடாசன், அளவெட்டி. கே.அரசேஸ்வரன், யாழ்ப்பாணம். இ.வாசவன், கல்வியங்காடு. திருமதி. P.S.செல்வராணி, சங்கானை. இ.வசந்தினி, ஏழாலை. க.குணபாலன், அளவெட்டி. V.C. சோதிநாதன், பண்ணாகம். T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. வி.இளங்கோ, கோப்பாய். த.மாலினி, சித்தன்கேணி. க.கலியுகதாசன், கொழும்புத்துறை. ஆ.அனுஷா, சித்தங்கேணி. எஸ்.விதுஷன், வண்ணார்பண்ணை. லோ.அபிராமி, வல்வெட்டி. A.அனித்தா, வடலியூர். த.கல்பனா, சுன்னாகம். ம.மாதினி, சாவகச்சேரி. லுகிர்தன், திருநெல்வேலி. சு.நிகேதினி, வண்ணார்பண்ணை. எஸ்.கஜராம், உடுவில். க.தரன் , இணுவில். எஸ.தர்சினி, யாழ்ப்பாணம். L.கீர்த்திகா, வல்வெட்டி. ம.தர்சிகா, வேலணை. மா.சிவராசா, மல்லாகம். ந.நடராசா, கல்வியங்காடு. கு.குமரன், யாழ்ப்பாணம். ச.சந்திரவதனி, புலோலி. செ.பாங்குஷா, நீர்வேலி. க.மயிலாஷினி, மருதனார்மடம். ப.திவ்வியா, அச்சுவேலி. ச.மனோகரன், உடுப்பிட்டி. சி.சுரேஸ்குமார், மல்லாகம். ப.கருணாகரன், அராலி. ம.மயில்வாகனம், ஆனைக்கோட்டை. அ.கஜந்தினி, வடலியூர். ம.மயூரன், ஏழாலை.



இது சாதாரண குட்டிப் பாப்பா பொம்மை என்று நினைத்துவிட வேண்டாம். இந்த பொம்மையின் பெயர் லிக்கா. இதன் விலை 5 லட்சம் ரூபாய். இதில் அப்படி என்ன விசேஷம்? பொம்மை தயாரிப்பு நிறுவனமான தகாரா நிறுவனமும் நகைகள் தயாரிப்பு நிறுவனமாக உராய் நிறுவனமும் இணைந்து இந்த பொம்மைகளை வெளியிட்டு இருக்கிறது.

தங்கம், வைர நகைகளை அணிந்திருப்பதால் தான் இந்தப் பொம்மைக்கு இந்த விலை. இதேபோல் 100 பொம்மைகளை மட்டுமே இப்போது விற்பனைக்கு வெளியிட்டு இருக்கிறார்கள்.

## தெரிந்து கொள்ளுங்கள்

* 100 ஆண்டுகளுக்கும் மேலாக பலன் தரக்கூடிய ஒரே ஒரு பழக் கொடி வகை திராட்சையாகும்.

* 63 சத்துக்கள் நிறைந்த ஒரே கீரைவகை அகத்திக்கீரையாகும். நமது உணவில் கண்டிப்பாக சேர்த்துக்கொள்ளவேண்டிய கீரை இது.


# கல்வி முகாமைத்துவத்தில் செயல்நிலை ஆய்வுகள்

(தொடர்ச்சி) 2

**பா. தனபாலன்**

இதற்கு உதவும் செயல்நிலை ஆய்வு நடைமுறைகள் இருபணிகளில் முக்கியமானவை. அவற்றில் ஒன்று ஆய்வு. மற்றையது நடைமுறைப்படுத்தல் என்ற வகையில் கல்வி முகாமையாளர்கள் பாடசாலை அதிபர்கள், கல்வியியல் ஆய்வாளர் என்ற நிலையிலிருந்து கல்வி அபிவிருத்தி நடைமுறையாளர் பாத்திரத்தை ஏற்க செயல்நிலை ஆய்வுகள் உந்துதலை ஏற்படுத்துகின்றன.

வினைததிறன் பொருந்திய செயற்பாடுகளைக் கொண்ட பாடசாலைகளைக் கட்டியெழுப்ப செயல்நிலை ஆய்வுப் பின்னணியானது, கல்விச செயன முறை (Education process), கல்வி நிர்வாகச் செயன்முறை (Administration process) நோக்கில் புதிய பிரவேசங்களை இனங்காணவும் உதவுகின்றன. இவ்வகையில் செயல்நிலை ஆய்வின் செயற்கிரமங்கள் பன்வரும் சுற்றுவட்ட நிகழ்வாக விளக்கப்படுகின்றன.




## படிமுறைகள்

முன்குறிப்பிட்ட செயற்கிரமங்கள் பின்வரும் படிமுறைகளாக செயன்நிலை ஆய்வில் அமுலாக்கப்படலாம்.

1. கல்வி முகாமைத்துவத்தில் ஒரு நிலைமையை- பிரச்சினையை இனங்காணல். அதுபற்றி ஏனையோருடன் கலந்துரையாடல், அந்நிலைமையை விளங்கிக் கொள்ளும் தகவல்களை அறிதல்.

2. எந்த மூலங்களில் இருந்து தரவுகள் பெறுதல் எனத் திட்டமிடல், பல நுட்பங்களைக் கையாண்டு தரவுகள் சேகரித்தல், தரவுகள் நிரற்படுத்தல், தரவுகளை ஆய்வுத் தேவைகளுக்கு ஏற்ப பகுத்தாராய்தல், புதியவற்றைக் கண்டுபிடித்தல், (தரவுகளை -நேரடி அவதானிப்பு, ஆவணப்பதிவுகள், கலந்தாய்வுகள், வினாக்கொத்துக்கள், பேட்டிகள், வெளியீடுகள், அறிக்கைகள், தினக்குறிப்புகள், சரியீட்டுப்பட்டியல்கள், விடய ஆய்வுகள், பரீட்சைகள், ஒப்படைகள், புகைப்படங்கள், வீடியோக்கள் என்பவற்றினூடு பெறலாம்).

3. ஆய்வு வினாக்களினூடாக விடைகளை அனுமானித்தல், செயற்பாடுகளைத் திட்டமிடுதல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல்.

4. நடைமுறைப்படுத்திய பெறுபேறுகளை நிரற்படுத்தி மதிப்பிடல், மேலதிக நடவடிக்கைகள் தேவை எனின் வழிகளைக் காணல்.

கல்வி முகாமைத்துவ செயல்நிலை ஆய்வுகளில் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு படியும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கமுடியாதவாறு இணைந்து காணப்படுகின்றன. இந்த இணைப்பை முகாமைத்துவ அணுகுமுறையில் பிரவேசித்தல் மூலமே பயனுடைய தாக்கலாம். செயல்நிலை ஆய்வின் செயற்பாடுகளை- உள்ளீடுகள்- வெளியீடுகளை வினைத்திறனாக்க கண்காணிப்பு (Monitoring) அவசியமாகத் தேவைப்படுகின்றது. இதன்மூலம் ஒவ்வொரு படியிலும் பிழைகளை நிவர்த்தி செய்யலாம். மேலும் முன்னேற்றக் கட்டுப்பாட்டிலும் (Progress control) கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். அதாவது செயல்நிலை ஆய்வில் எதிர்பார்க்கப்பட்ட உள்ளீடுகள் உரியவாறு ஈடுபடுத்தப்பட்டனவா? உத்தேச செயற்பாடுகள் உரிய காலத்தில் நிறைவேறினவா? அது நடைமுறைப்படுத்தப்படும் முதற் சந்தர்ப்பம் தொட்டு வெளியீடுகள் உறுதி செய்யப்படுகின்றனவா? என்பவை தொடர்பான வட்டங்கள் முன்னேற்றக் கட்டுப்பாட்டில் இடம்பெறும். இது செயல்நிலை ஆய்வை விளைதிறனாக்கும். இங்கு விளைதிறன் என்பது, வளங்களை உச்சநிலையில் பயன்படுத்தி ஆய்வு இலக்குகளை முழுமையாக அடைவதைக் குறிக்கும்.

மேலும் கல்வி முகாமையாளர்கள் தாம் பணிபுரியும் சூழலில் பிரச்சினைக்குரிய ஒரு நிலைமையைச் சாதகமாக மாற்றியமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான திட்டமிட்ட செயலொழுங்காகவும் செயல்நிலை ஆய்வு உள்ளது. இது பிரச்சினையான நிலைமைகளை மாற்றியமைப்பதோடு, ஒருவரது முகாமைத்துவ வாண்மைத் தரங்களை முன்னேற்றுவதிலும் பங்கு வகிக்கின்றது. சேவையிலிருந்து கொண்டே தாம் தொழில் புரியும் இடத்தில் தமது வாண்மையை மேம்படுத்துவதோடு, தமது சூழலில் உருவாகும் சாதகமற்ற சூழ்நிலைகளை மாற்றியமைத்து அபிவிருத்தி காணவும் செயல்நிலை ஆய்வுகள் வழிகாட்டுகின்றன.

### ஆய்வொழுக்கம்

செயல்நிலை ஆய்வுக்கான ஒழுக்கமானது இதன் ஆரம்ப நிலையிலிருந்து முடியும்வரை மேலும் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்துமே மனித விழுமியங்களுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தலைக் குறிக்கின்றது. உண்மைத்தன்மை, யதார்த்தம், நீதி, பொய்யான தகவல்களை ஏற்காமை, புள்ளிகளைப் பெறவேண்டும் என்பதற்காகப் பொய்யான தகவல்களைச் சேர்க்காமை, மாதிரிகளைப் பிரதி செய்யாமை போன்ற குணவியல்புகளைச் செயல்நிலை ஆய்வாளர்கொண்டிருக்க வேண்டிய அவசியத்தையே செயல்நிலை ஆய்வு ஒழுக்கம் வலியுறுத்துகின்றது.

மேலும் செயல்நிலை ஆய்வாளர் பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல் நிலை ஆய்வு ஒழுக்கத்தைப் பேண வேண்டும்.

I. ஆய்வு தொடர்பாக உரியவர்களுடன் தொடர்பு கொள்ளும்போது, ஒன்று சேர்ந்து பணியாற்றும்போது, வேலைகளை பகுக்கும்போது ஆய்வு ஒழுக்கத்தைப் பேணவேண்டும்.

II. தரவு தரப்படுத்தல், பரீட்சைக் கணிப்பீடுகள், பெறுபேறுகளை ஆதாரம் காட்டுதல், மேற்கோள்கள் காட்டுதல், தகவல்கள் சேகரிக்கும்போதும் ஆய்வு ஒழுக்கத்தைப் பேணவேண்டும்.

ஒரு தனியாளிலிருந்து செயல் நிலைஆய்வு ஒரு குழுநிலை சார்ந்த முயற்சியாகவே பரிணமிக்கின்றது. எனவே, ஆய்வாளர் பல்வேறு குழுக்களுடன் தன்னை இயைவுபடுத்துதல் அவசியம். அத்துடன் ஆய்வாளர் மனித விழுமியங்களைக் கைக்கொண்டு பண்பாக பேசுதல், நட்புடன் உரையாடுதல், ஒருவரை ஒருவர் மதித்தல், உணர்வுபூர்வமாகச் செவிமடுத்தல், இரகசியம் பேணுதல் போன்ற செயல்நிலை ஆய்வு ஒழுக்கத் தகுதிப் பிரமாணங்களைக் கொண்டிருக்கவேண்டும்.

இவை செயல்நிலை ஆய்வாளரின் வாண்மைத்துவத்தையும் வினைத் திறனையும் உயர்த்தும்.

*நன்றி: கல்வியியலாளன்.*

---

# 20 வருடங்களாக மின்விநியோகம் இல்லை புங்குடுதீவு பிரதேச மக்கள் கடும் விசனம்

**உடன்நடவடிக்கை எடுக்குமாறும் எம்.பிகளிடம் கோரிக்கை**

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேசத்துக்கு நீண்ட காலமாக மின்சாரம் வழங்கப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1985ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து இன்றுவரை புங்குடுதவு பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இதனால் மாணவர்களின் கல்வி நிலையில் வீழ்ச்சிப் போக்கினை காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை வைத்தியசாலையிலும் கூட மின்சாரம் இல்லாமையினால் பழுதடையக்கூடிய மருந்து வகைகளைக் கூட பாதுகாக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் சிகிச்சை பெறமுடியாது யாழ்ப்பாண போதானா வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

எனவே புங்குடுதீவு பிரதேச வாழ் மக்களின் துன்பநிலையினை கருத்திற்கொண்டு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் புங்குடுதீவு பிரதேசத்துக்கு மின்சாரம் பெற்றுத்தருவதற்கு உரிய நடவடிகைகளினை மேற்கொள்ளவேண்டுமென புங்குடுதீவு வாழ் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-126)

---

**புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்திற்கு**

# பணிஸ் வழங்கல் நிறுத்தம் பெற்றோர்கள் விசனம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேசத்தில் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு புங்குடுதீவு கனடா வாழ பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் வட இலங்கை சர்வோதயத்தினால் இரு பாடசாலைகளுக்கு ஆதார உணவாக பணிஸ வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் இரண்டு மாதங்களாக புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்துக்கு வழங்கப்படட்டு வந்த பணிஸ் விநியோகம் இடைநிறுத்தப்பட்டமையடுத்து அப்பகுதி பெற்றோர்கள் விசனம் தெரிவித்துத்துடன் தொடர்ந்து ஆதார உணவு வழங்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ப-126)

---

# பாதிப்புற்ற மாணவர்கள் உடன் தொடர்பு கொள்க!

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் முழுமையாகப் பாதிக்கப்பட்டு தமது கல்வியினை சரியான முறையில் முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ள பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி, உயர் தொழில்நுட்ப நிறுவனம் ஆகிய உயர்கல்வி நிலையங்களில் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தொடர்ந்து உதவவுள்ளது.

குறிப்பிட்ட கல்வி நிலையங்களில் கல்விகற்கும் மாணவர்கள் தங்களின் உயர்கல்வியைப் பூர்த்தி செய்யும்வரையுமே இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்த உதவிகளைப் பெறவிரும்புவோர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு சரியான தகவல்களை சமர்ப்பிக்குமாறு பேரவையின் பொறுப்பாளர் ந.கண்ணன் கேட்டுள்ளார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் உதவியை ஏற்கனவே பெற்றவர்களும் இந்த உதவிகளைப் பெற முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இதுவரை 2 லட்சம் ரூபா பணத்தையும், 5 லட்சம் ரூபா பெறுமதியான உதவு பொருட்களையும் வழங்கி உதவியுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

---

# பதில் தபாலதிபர் நியமனம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அஞ்சல் அலுவலகத்தில் தபால் அதிபராக கடமையாற்றிய சி.கணேசமூர்த்தி பயிற்சிக்காக மட்டக்களப்பு செல்வதையிட்டு புங்குடுதீவு அஞ்சல் அலுவலகத்திற்கு பதில் தபால் அதிபராக செ.திருஞானசம்பந்தர் கடந்த 29ஆம திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

(ப-126)

# ஈராக்கில் பல பகுதிகளிலும் வன்முறைகள்

## 40 பேர் வரை பலி; பலர் படுகாயம்

(பக்தாத்)

கடந்த 50 ஆண்டுகளின் பின் ஈராககில் முதன் முறையாக நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தல், வன்முறையைச் சந்திக்கத தவறவில்லை. வன்முறைச் சம்பவங்களில் 40 பேர் பலியானார்கள். ஏராளமானோர் பலத்த காயமடைந்தனர்.

பக்தாத் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் தீவிரவாதிகள் குண்டுகளை வீசியும் துப்பாக்கியால் சுட்டும் பொதுமக்களை அச்சுறுத்தினர்.

அமெரிக்க தூதரகம் மீது ரொக்கெட் குண்டு வீசப்பட்டதில் அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த 2 அமெரிக்கர்கள் இறந்தனர். நால்வர் காயமடைந்தனர்.

பக்தாத்தைச் சுற்றி 9 இடங்களில் தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தினர். இது தவிர, 2 இடங்களில் பீரங்கிகளால் தீவிரவாதிகள் சுட்டனர்.

இதற்கிடையில் தேர்தலில், நாட்டின் அதிபர் காஸி அல் - யாவர் முதல் நபராக வந்து வாக்களித்தார். அவரைத் தொடர்ந்து இடைக்கால பிரதமர் அயாத் அல்லாவி வாக்களித்தார்.

ஈராக் மக்கள் தங்களது தலைவிதியைத் தாங்களே தீர்மானித்துக்கொள்ளும் வாய்ப்பு இத்தேர்தல் என்று அதிபர் காஸி அல்-யாவர் தெரிவித்துள்ளாட. ஈராக் தேசிய அவைக்கு (நாடாளுமன்றம்) 275 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுபபதற்காக வாக்குப்பதிவு நடைபெற்றது.

வாக்குப்பதிவு தொடங்கிய 1 மணி நேரத்தில் வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறத் தொடங்கின.

ஷியா முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் வாக்களிப்பு விறுவிறுப்பாக இருந்தது.

இதேவேளை, இதற்கு மாறாக சன்னி முஸ்லிம்கள் வசிக்கும் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இருப்பினும் நாட்டின் பிற பகுதிகளில் உள்ள கல்வி நிலையங்கள் மற்றும் கட்டடங்களில் வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டு பலத்த பாதுகாப்புடன் வாக்குப் பதிவு நடைபெற்றது.

இதேவேளை ஈராக்கில் நிலவும வன்முறைக்கு முடிவுகட்ட தேர்தல் நல்ல வழி. இத்தேர்தலை ஆதரிக்கிறோம் என்று பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் மைக்கேல் பர்னியர் பாரீசில் கூறியுள்ளார்.

தேர்தல் வெற்றிகரமாக நடைபெறவேண்டும் என்பதற்காக அமெரிக்க துருப்புகளும் ஈராக் இராணுவ



வீரர்களும் பெரிதும் பாடுபட்டனர்.

ஒலிபெருக்கிகளில் வீதியெங்கும் முழங்கி, வாக்குச்சாவடி குறித்த விவரங்களை மக்களுக்குத தெரிவித்தபடி இருந்தனர். தேர்தல் முடிந்த பின்பும் யு.எஸ். படைகள் இருக்க வேண்டும். ஈராக்கில் தேர்தல் முடிந்த பின்னரும அமெரிக்கா தலைமையிலான வெளிநாட்டுப் படைகள் இருக்கத்தான் வேண்டும் என்று எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக் கெய்ரோவில் நேற்றுமுன்தினம கூறினார். உள்நாட்டு யுத்தம் ஏற்படாதிருக்க இது அவசியம் என்றார்.

வன்முறைகள் நடந்தாலும் பொதுவாக இத்தேர்தலை ஈராக்கியத் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

(க)

## ஒட்டிப்பிறந்த குழந்தைகள் பிரிப்பு

(ஜாவா)

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் 9 மணி நேர ஆப்ரேசனுக்குப் பின் பிரிக்கப்பட்டன.

இந்த ஆப்பரேசனில் மொத்தம் 50 டாக்டர்களும், 19 தாதியர்களும் ஈடுபட்டிருந்தனர்.

ஜாவாவின் கிழக்கு பகுதியில் சுரபையா என்ற இடத்தில் உள்ள மருத்துவமனையில் கடந்த சனிக்கிழமை இந்த ஆபரேசன் நடந்தது.

குழந்தைகளின் உடல் நிலை சீராக உள்ளதாக டாக்டர்கள் கூறினர். (க)

## துருக்கியில் நில நடுக்கம்

(லண்டன்)

தெற்கு துருக்கியில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

5.3 ரிக்டர் அளவில் இந்த நில நடுக்கம் இருந்ததாக வானிலை ஆராய்ச்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதனால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து உடனடியாகத் தகவல்கள் இல்லை.

கடந்த செவ்வாய்க்கிழமையும் 5.5 ரிக்டர் அளவில் துருக்கியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதில் 2 பேர் பலியாயினர். 22 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## 50 ஆண்டுகளின் பின்னர் ஈராக்கில் தேர்தல்

## 72 சதவீதமானோர் வாக்களித்தனர்

(பக்தாத்)

கடந்த 50 ஆண்டுகளின் பின் ஈராக்கில் முதன் முறையாக நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தீவிரவாதிகளின் தாக்குதல்களையும் மீறி 72 சதவீதமானோர் வாக்களித்தனர்.

தீவிரவாதிகளின் வன்முறைத் தாக்குதல்களில் ஈராக் பொலிசார் 6பேர் உட்பட 36பேர் பலியானார்கள். 96 பேர் படுகாயமடைந்தனர்.

வாக்குப்பதிவு தொடங்கிய ஒரு மணி நேரத்தில் வன்முறைச் சம்பவங்களும் அரங்கேறத் தொடங்கின.

பக்தாத் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் தீவிரவாதிகள் குண்டுகளை வீசியும் துப்பாக்யால் சுட்டும் பொதுமக்களை அச்சுறுத்தினர். பக்தாத்தைச் சுற்றி 9 இடங்களில் தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தினர். இதுதவிர 2 இடங்களில் பீரங்கிகளால் தீவிரவாதிகள் சுட்டனர்.

வாக்குப்பதிவு தொடங்கியவுடன நாட்டின் அதிபர் காஸி அல்-யாவர் முதல் நபராக வந்து வாக்களித்தார். அவரைத் தொடர்ந்து இடைக்கால பிரதமர் அயாத் அல்லாவி வாக்களித்தார்.

ஈராக் தேசிய அவைக்கு 275 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக வாக்குப் பதிவு நடைபெற்றது.

வாக்குப் பதிவு முடிவதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பாகவே, மொத்தமுள்ள ஒருகோடி 40 லட்சம வாக்காளர்களில் 72 சதவீதம் பேர் வாக்களித்ததாக ஈராக் தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இந்திய நேரப்படி ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30மணிக்கு வாக்குப் பதிவு நேரம் முடிந்தது.

அப்போதும் வரிசையில் ஏராளமானோர் காத்திருந்தனர். வரிசையில் நின்றிருப்பவர்கள் அனைவரும் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று தேர்தல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஷியா முஸ்லிம்கள், குர்துகள் வாழும் பகுதிகளில் வாக்களிப்பு விறுவிறுப்பாக இருந்தது. கல்வி நிலையங்கள் மற்றும் கட்டடங்களில் வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டு பலத்த பாதுகாப்புடன வாக்குப் பதிவு நடைபெற்றது.

தேர்தல் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்பதற்காக அமெரிக்க துருப்புகளும் ஈராக் இராணுவ வீரர்களும் பெரிதும் பாடுபட்டனர். ஒலிபெருக்கிகளில் வீதியெங்கும் முழங்கி வாக்குச் சாவடி குறித்த விபரங்களை மக்களுக்குத் தெரிவித்தபடி இருந்தனர்.

இதேவேளை, சன்னி பகுதிகளில் சன்னி முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பலூஜா, ரமடி, சமாரா உள்ளிட்ட பகுதிகளில் வாக்குப் பதிவு குறைந்த அளவில் இருந்தது. எனினும் எதிர்பார்த்ததை விட இது அதிகம் என்று தேர்தல் ஆணையம் கூறியது. (க)

## ஆலடி அருணா கொலை;; பின்னணியில் எஸ்.ஏ.ராஜா?

(லண்டன்)

முன்னாள் அமைச்சர் ஆலடி அருணாவை கொலை செய்ய கூலிப் படையை ஏவியதாகக் குற்றம்சாட்டி வள்ளியூரைச் சேர்ந்த தொழிலதிபர் எஸ்.ஏ.ராஜாவை காவல்துறையினர் நேற்றுமுன்தினம் கைது செய்து விசாரணைக்காக நெல்லைக்கு அழைத்து வந்துள்ளனர்.

ஆனால் இந்தத் தகவலை காவல் துறையினர் உறுதிப்படுத்தவில்லை.

ஆலடி அருணா கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி காலை நடைபயிற்சி முடித்துவிட்டு அவரது வீட்டுககுத் திரும்பிக் கொண்டிருந்த போது மர்ம மனிதர்களால் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் கொல்லப்பட்டார். இதில் அவரது நண்பர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

இந்த வழக்கில் தனிப்படை காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து இதுவரை நான்கிற்கும் மேறபட்டோரைக் கைது செய்துள்ளனர். கைதானவர்களில் ஒருவன் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் கூலிப்படையை ஏவி எஸ்.ஏ.ராஜா தான் இந்த கொலைக்கு சதி திட்டம் தீட்டியதாக தெரிய வந்தது.

அதன் அடிப்படையில் நேற்று காலை எஸ்.ஏ.ராஜாவை நெல்லை மாவட்டம் வள்ளியூர் அருகே உள்ள வடக்கன குளத்தில் உள்ள அவரது வட்டிற்குச் சென்று விசாரணைக்கு வருமாறு அழைத்தனர். பின்னர் அவரை நெல்லைக்கு அழைத்து வந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொறியியல் கல்லூரி தொடர்பாக ஏற்பட்ட கருத்துவேறுபாட்டில் இந்தக் கொலை நடத்திருக்கலாம் என்று காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (க)



பின்தங்கிய மற்றும் சீர்மரபினைச் சேர்ந்த 2.5 லட்சம் மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை தலைமைச் செயலகத்தில் முதல் அமைச்சர் ஜெயலலிதா துவக்கி வைத்த காட்சி.

உலக தரிசனம்

## சூடான் மீது தடைகள் விதிக்க வேண்டும் என்கிறார் அனான்

(லண்டன்)

சூடான் மீது தடைகள் விதிப்பது குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை ஆலோசிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

தாகூர் பிராந்தியத்தில் மனித உரிமைகள் மீறப்படும் வகையிலான வன்முறைகள் மலிந்து செல்வதாக சுட்டிக்காட்டிய கோபி அனான்,

தாகூரில் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்படுவதாகவும், இவை தொடர்பான ஐக்கிய நாடுகளின் அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வன்முறைகள் தொடர்வதை அனுமதிக்கமுடியாது என குறிப்பிட்ட கோபி அனான், சூடான் மீது தடைகள் விதிப்பதற்கு பாதுகாப்பு பேரவை ஆலோசித்தபோதும் பேரவையில் நிலவும் சில கருத்து முரண்பாடுகள் காரணமாக அதனை நடைமுறைபபடுத்த முடியவில்லை என்று தெரிவித்தார்.

எனினும் தற்போதைய சூழலில தடைகள் விதிப்பது அவசியம் எனத் தான் கருதுவதாகவும் தெரிவித்தார். (க-61)

## குதிரையில் வந்து குறைகேட்கும் மூத்த பெண் ஐ.ஏ.எஸ்.அதிகாரி!

(சென்னை)

மத்திய பிரதேசத்தில் குதிரை மீது அமர்ந்து வந்து குறை கேட்கிறார் ஒரு ஐ.ஏ.எஸ்.அதிகாரி.

அவர் பெயா ஸ்நேகலதா குமார் பகத். இவருக்கு வயது 49. கோட்ட ஆணையராக இருக்கிறார். பேண்ட அணிந்து குதிரை மீது அமர்ந்து எல்லா இடங்களுக்கும் சென்று திடீரென்று ஆய்வு நடத்துகிறார்.


கார், பஸ் போன்றவை போகாத இடங்களுக்கெல்லாம் இவரால் குதிரையில் எளிதில் செல்ல முடிகிறது. இதனால் அதிகாரிகளுக்கு எப்போதுமே கிலி. எப்போது வருவார்? என்ன கேட்பார்? என்று ஒரே பதை பதைப்பு.

காரில் செல்வதை விட குதிரையில் செல்வதால் மக்களுடன் நேரடியாகப் பேசும் வாய்ப்புக் கிடைக்கிறது. அவர்களது குறைகளை நேரடியாக கேட்க முடிகிறது.

மக்களவை, பேரவை, உள்ளாட்சி தேர்தல் சமயத்திலும் கூட இதே போல குதிரையில்தான் சென்றேன். இது எனக்கு வசதியாக இருக்கிறது.

ஐ.ஏ.எஸ் பயிற்சியின் போது குதிரை ஏற்றம கற்றுக்கொடுக்கப்பட்டது. அதிலிருந்து குதிரைப் பயணம் எனக்கு பிடித்தமான ஒன்றாகி விட்டது என்கிறார் மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரியான இவர்.

ஊர் மக்கள் அனைவரும் இவரை குதிரை ராணி என்றே அழைககின்றனர். இவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளன. சென்னையில் ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்கான விளையாட்டுப் போட்டி நடந்தபோது, நீச்சல் பிரிவில் இவர் இரு வெள்ளிப் பதக்கங்களை வென்றது குறிப்பிடத தக்கது. (க)



ஹைதராபாத் லும்பினி பூங்காவில் நடைபெற்ற லேசர் ஷோவிலிருந்து ஒரு காட்சி.

# முதுகு வலியில் இருந்து எளிதாகத் தப்பமுடியும்

முதுகுவலி யாருக்கு வரும், யாருக்கு வராது என்றெல்லாம் ஜோசியம் சொல்ல முடியாது. அதுவும் இன்றைய இயந்திர மயமான வாழ்க்கையில் யாருக்கு வேண்டுமானாலும் இந்த நோய் வர வாய்ப்புள்ளது.

இன்றைக்கு எண்பது சத விகித மக்களுக்கு பாகுபாடின்றி முதுகு வலி வருகிறது. ஆனால் யாருமே இதற்கு சிகிச்சை எடுப்பதில்லை. தங்களுக்குத் தெரிந்த சிகிச்சையைத் தாங்களாகவே செய்து கொள்கிறார்கள். நோய் முற்றிப் போய் வேறு வழியே இல்லை எனில் டாக்டர்களிடம் கூறுகிறார்கள். இப்படிக் கவனிக்காமல் விடுவதால் முதுகெலும்பும் அதனுடன் இணைந்து இருக்கும் தசை நார்களும் கடும் பாதிப்புக்கு உள்ளாகின்றன.


## முதுகுவலி ஏன் வருகிறது?

சரியான முறையில் உட்காராமல், நிற்காமல், படுக்காமல் இருக்கும் நபர்களுக்கு இந்த வலி உடனடியாகத் தெரியும்.

பலர், வயிறு தரையில் நன்கு அழுந்துமாறு கவிழ்ந்து படுத்துக் கொண்டு தொலைக்காட்சி பார்ப்பார்கள், அல்லது புத்தகம் படிப்பார்கள் குறிப்பாக குழந்தைகள் இதனை அதிகம் செய்கிறார்கள். இது மிகவும் தவறான பழக்கம்.

இன்னும் சிலர் பகலில் கூட மணிக் கணக்காக படுத்துக் கொண்டே இருப்பார்கள். சிலர் மிகக் கடினமான தலையணை அல்லது படுக்கையை உபயோகிப்பார்கள். இவையெல்லாம் முதுகுவலிக்குக் காரணம் என்று தெரியாமலேயே நாம் பின்பற்றும விஷயங்கள் என்று மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

நமது முதுகெலும்பு என்பது 33 எலும்புகளை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைத்த ஓர் அமைப்பு. ஒவ்வொரு எலும்புக்கு நடுவிலும் ஒரு தட்டு இருக்கும்.




உடம்பின் மேற்பகுதி எடை முழுவதும் இந்த முதுகெலும்பின் மீது

## மருத்துவ விளக்கம்

தான் விழுகிறது. இவ்வளவு எடையைத் தூக்கிக் கொண்டு அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் சடாரென்று திரும்பும்போது பளுதாங்காமல் முதுகுவலிக்கத் தொடங்குகிறது. அதேபோல கடுமையாகத் தொடர்ந்து வேலை செய்தாலும், முதுகுவலி வரும்.

பலர் ஆர்வக்கோளாறால் தவறான முறையில் நெடுநேரம் உடற்பயிற்சி செய்வார்கள்.

ஆர்வமிகுதியில் புதிதாக ஜிம்முக்கு செல்லும் பல இளைஞர்கள், போதிய வழிகாட்டுதல் இல்லாமல் நீண்ட நேரம் உடற் பயிற்சி செய்வார்கள். குறிப்பிட்ட சில தினங்களிலேயே இதன் பலனை உணர்வார்கள்.

இளம் பிராயத்தில் நாம் மிகக் கடுமையாக வேலை செய்வோம். பெரும்பாலும் அப்போது எந்த வலியும் தெரியாது. ஆனால் நாற்பது வயதுக்குப் பிறகு முதுகெலும்பு கொஞ்சம் கொஞ்சமாகத் தேயத் தொடங்கும். கல்சியம் மற்றும் இதர கனிமத்தாதுக்கள் குறையக் குறையத் தசைநார்கள் வலுவிழக்கத் தொடங்கும். அதிலும் பெண்களுக்கு இந்த முதுகெலும்புத் தட்டுகள் மிகச் சீக்கிரமே பாதிக்கப்படுகின்றன.

தொடர்ந்து ஓய்வெடுப்பதும், அல்லது தொடர்ந்து வேலை செய்துகொண்டே இருப்பதும் முதுகு வலியை அதிகப்படுத்துகின்றன.

குண்டான பெண்களுக்கு மிகச் சீக்கிரமே முதுகுவலிப் பிரச்சினை ஏற்பட்டு விடுகின்றது.

இவர்கள் உடலுக்கு இதமாக இருக்க வேண்டு மென்பதற்காக மென்மையான மெத்தைகளைப் பயன்படுத்துகிறார் கள். இவைதான் முதுகு வலியை இன்னும் அதிகமாகத் தூண்டிவிடு கின்றன. மிருதுவான படுக்கை உடலின் தசை நார்களுக்கு ஓய்வு கொடுத்தாலும், எலும்புகளை அவை தாங்கிப்பிடிப்பதில்லை.

பல பெண்கள் நாகரிகம் என்ற பெயரில் அரை அடி உயரத்துக்கு குதிக்கால் செருப்புகளை அணிகிறார்கள். இம் மாதிரி உயரமான செருப்புகளை அணிந்து கொண்டு வேகமாக நடக்கும்போது இடுப்பு எலும்பும், முதுகெலும்பும் பாதிக்கப்படுகிறது. உயரமான குதிகால் செருப்பு அணிபவர்களுக்கு விரைவிலேயே முதுகுவலி வரும்.

இரவில் அதிக நேரம் விழித்திருந்து மெகா சீரியல் பார்த்து முடித்து அதன் பிறகு சமையல் வேலைகளைக் கவனிக்கும் பெண்களுக்கும் மிகவிரைவில் முதுகுவலி வந்துவிடும்.

## மீட்சி பெற முடியுமா?

இந்த நோய்க்கு என்னதான் மருந்து சாப்பிட்டு அல்லது அறுவை சிகிச்சை செய்து கொண்டாலும், நிவாரணம் என்பது ஓரிருநாளில் கிடைத்துவிடாது.

சீரான உடற்பயிற்சியும் மருத்துவரின் அறிவுரையையும் தட்டாமல் நடப்பதுதான் இப்பிரச்சினைக்குத் தீர்வுபெறும் வழி.

## உடற்பயிற்சி நன்மை தரும்.

இடுப்புக்கு கீழேயுள்ள தசை நார்கள் வலுப்பெற சில உடற்பயிற்சிக்களைத் தினமும் செய்வது நல்லது. தினமும் உடற்பயிற்சி செய்வதால் தசைநார்கள் மிருதுவாவதோடு, வளையும் தன்மை பெறுகிறது. அவை வலுப்பெறுவதால் முதுகு வலி அறவே நீங்குகிறது.

உங்கள் வசதிக்கான எளிய உடற்பயிற்சி இதோ....

**டாக்டர் V.R.நாத**

★ நேராக நின்றபடி இரண்டு கைகளையும் மேலே உயர்த்தவும் மூச்சை உள்ளுக்குள் இழுக்கவும். வலது பக்கம் குனியவும். பிறகு மெல்ல மெல்ல திரும்ப பழைய நிலைக்கு வரவும். மூச்சை இழுத்து விடவும். இதேபோல மூச்சை உள்ளேயிழுத்து விட்டபடியே இடது பக்கம் குனியவும். ஆரம்பத்தில் 5.5 முறை செய்யவும். நாளுக்கு நாள் இப்பயிற்சி செய்வதை அதிகரிக்கவும். □

## படகு திருத்தும் சேவை

நோர்வே நாட்டின் ஏ.ஜே நிறுவனத்தால் பருத்தித்துறைப் பகுதியில் இலவச படகு திருத்தும் சேவை மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை, குறிப்பிட்ட நிறுவனத்தின் நிறுவுநர்சார் வொய்க் யாழ்ப்பாணத்திக்கு விஜயம் செய்து மீனவர்களுக்கான உதவிகள் வழங்குவது குறித்து ஆராயவுள்ளார். (க-43)

## திருநீற்றுப் புதன் திருப்பலி

புனித சூசையப்பர் ஆலயத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.00 மணிக்கு திருநீற்றுப் புதன் (வீபூதி) திருப்பலி பங்குத் தந்தை அருட்திரு அன்ரனி ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினத்திலிருந்து தவக்காலம் ஆரம்பமாகின்றது. (க)

## நோயாளிகள் விசனம்

வலி-தென்மேற்குப் பிரதேச சபையின் ஆணைக்கோட்டை உப-அலுவலகப் பிரிவில் இயங்கும்- ஆயுர்வேத வைத்தியசாலை உரிய நேரத்திற்கு திறக்கப்படுவதில்லை என்று வைத்திய சாலைக்கு வரும் நோயாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால், நேரத்துடன் வரும் வைத்தியர் உட்பட சிகிச்சைபெற வரும் நோயாளிகளும் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய நிலையுள்ளதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். எனவே, சம்பந்தப்பட்டவர்கள் உரிய நேரத்திற்கு வருகை தந்து உதவுமாறு மக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (க-49)


## பூஜை

வீரத்துறவி சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழாவினையொட்டி பல்வேறு நிகழ்வுகளை நடத்த கொக்குவிலிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இதில் ஆரம்ப நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு கொக்குவிலுள்ள ஸ்ரீராம கிருஷ்ணா வித்தியாலயத்தில் பூஜை வழிபாடுகளுடன் இடம் பெறவிருக்கின்றது. (ப-9)

# தமிழர் பகுதிக்கு இந்தியா உதவவேண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் கோரிக்கை

இலங்கையின் தமிழர் பகுதிகளுக்கும் இந்தியா நிவாரண



உதவிகளை வழங்க வேண்டும் என விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு இந்தியா உள்ளிட்ட பல நாடுகளும் பல மில்லியன் டொலர்கள் அளவுக்கு நிவாரண நிதியையும், உதவிப் பொருட்களையும் வழங்கியுள்ளன. ஆனால் இந்த உதவிகளை தென்னிலங்கைக்கே செலவிட்டு வரும் ஸ்ரீலங்கா அரசு சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளை புறக் கணித்து வருகிறது என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை செய்துவரும் இந்தியா வடக்கிற்கும் தனது கனிவான பார்வையைத் திருப்ப வேண்டும். தெற்கு மற்றும் கிழக்கில் மட்டும் இந்திய உதவிகள் சென்றடைந்து வருகின்றன.

பாதிக்கப்பட்ட எங்கள் பகுதி மக்களுக்கும் இந்தியா உதவ வேண்டும். இந்த உதவிகள் எந்த வகையில் கிடைத்தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். எங்களுக்கு தொழில்நுட்ப உதவியும் தேவைப்படுகிறது.

பல்லாண்டுகளாக போரால் துயரத்துக்குள்ளான எங்களுக்கு இந்தப் பேரழிவு பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது.

தமிழர்கள் பகுதி மீதான இலங்கை அரசின் விரோத மனப்பான்மை தொடரத்தான் செய்கிறது. இதனால் தான் ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அன்னானையும், கனடா நாட்டு பிரதமரையும் எங்கள் பகுதிக்கு விடாமல் இலங்கை அரசு தடுத்துவிட்டது.

பல உலகத் தலைவர்கள் இப்பகுதியில் சுனாமி பாதிப்பை பார்வையிட விரும்பினாலும் அதை மனிதாபிமான அடிப்படையில் கூட இலங்கை அரசு அனுமதிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-4)

# கூட்டுறவுச் சங்கங்களில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடா?

**சமூக நலன்புரி சேவைகள் அமைச்சு ஆராயும்**

(கொழும்பு)

சுனாமிப்பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு விநியோகிக்க போதுமான உணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்றதா? என்பது குறித்து ஆராய்ந்து தேவையான அளவு உணவுப் பொருட்களை அனுப்பிவைக்க சமூக நலன்புரி சேவைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக நிவாரண உணவு முத்திரைகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா? என்பது குறித்தும் ஆராய இருப்பதாக சமூக நலன்புரி சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தினால் 5 இலட்சத்து 55 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சமூக நலன்புரி சேவைகள் அமைச்சும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் கூறுகின்றது. (க-9)

# எவ்வித வேறுபாடுமின்றி நிவாரணம் வழங்கப்படும்

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு**

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல பகுதிகளுக்கும் எந்தவிதவேறுபாடும் இன்றி நிவாரணம் வழங்குவதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுயமுயற்சியின் பேரில் மாத்தறையை மீளக் கட்டியெழுப்பும் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து பிரதமர் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புனர்நிர்மாண வேலைகளில் ஈடுபடுவோருக்குக் கொடுப்பனவு ஒன்றை வழங்க சர்வதேச தொழில் ஸ்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வளர்ப்புப் பெற்றோர் திட்டம் ஒன்றும் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இவைதவிர சேதமுற்ற துறைமுகங்களை மீளமைப்பதற்கும் கடற்றொழிலை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் சீன அரசாங்கம் உதவி செய்வதாக உறுதியளித்துள்ளது.

மாத்தறையை மீளக் கட்டியெழுப்புவதற்கு தலைமை தாங்கும் அமைச்சர் மங்கள சமரவீரவும், சேதமுற்ற பாடசாலைகளை புனரமைப்பதற்கு நோர்வே அரசாங்கம் நிதி உதவியை வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கரையோரத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் வசித்த குடும்பங்களுக்கு வேறு இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் திட்டம் இவ்வாரம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். மாத்தறை மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல்லையும் பிரதமர் நாட்டி வைத்தார். (க)

**மக்கள் வங்கிகளில்**

# அடகுவைத்த நகைகளை இலவசமாகப் பெறலாம்?

(கொழும்பு)

கடற்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்கள் அடகு வைத்த நகைகளை நெருங்கிய உறவினர்களிடம் இலவசமாக மீளக் கொடுப்பதற்கு மக்கள் வங்கி உத்தேசித்துள்ளது.

20 ஆயிரம் ரூபா வரையிலான வைப்பை கொண்ட ஆபரணங்களே இவ்வாறு மீள வழங்கப்படவிருக்கின்றன.

இதற்கு மேல் பெறுமதி வாய்ந்த ஆபரணங்கள் அடகு வைக்கப்பட்டிருந்தால் அவற்றிக்கு ஓரளவு குறைந்த வட்டி விதிக்கப்படும்.

மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் இது பற்றித் தகவல் தருகையில், சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நகைகளை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று தெரிவித்தார். (க-9)

# புலிகளின் நிவாரணப்பணிகளை தடுத்து நிறுத்துவதும் இனவிரோத வன்செயல்களினது வேறொரு வடிவமே

## ஸ்ரீலங்கா படையினர் போடும் முட்டுக்கட்டைகள் குறித்து தளபதி ராம் விளக்கம்

காலம் காலமாகவே எமது மக்களின் உரிமைகளைப் பறித்து போராட்டத்தையும் அழித்து விடுகின்ற நடவடிக்கைகளையும் திட்டமிட்டவகையில் சிங்களப் பேரினவாத அரசு செயற்படுத்தி வந்துள்ளது என்பது அனைவருக்கும் தெரியும்.

இதே போலத்தான் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அலைத் தாக்குதலில் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கான அவசர நிவாரணப் பணிகளை புனர்வாழ்வுப் பணிகளை நாம் மேற்கொள்ளும் போது அதற்கு இடையூறு விளைவிப்பதன் மூலம் ஏற்கனவே உயிர்களையும் உடமைகளையும் இழந்து உளரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பாதிக்கப்படுகின்றனர்.

போராளிகள் நேரடியாக நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு இடையூறு செய்தல் கல்வி மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுக்கும் போது மாணவர்களை ஆசிரியர்களை அச்சுறுத்தல், ஆயுத பாணிகளாக நலன்புரி நிலையங்களில் இரவு பகல் பாதுகாப்புப் பணி என்ற போர்வையில் நின்று மக்களின் இயல்பான நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல். குறிப்பாக பெண்களுக்கான தனித்துவத்தைப் பாதிக்கும் வகையில் நடந்துகொள்ளுதல் என்பன திட்டமிட்ட தமிழின ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் இன்னுமொரு வடிவம் அல்லது அதன் தொடர்ச்சி என்றுதான் கூற வேண்டும்.

என மட்டு அமைப்பு அம்பாறை மாவட்ட தளபதி ராம் தெரிவித்துள்ளார்.

தற்போது மட்டு-மட்டு அம்பாறை மாவட்ட நிலைமை பற்றி அங்கு நிகழும் புனர்நிர்மான செயற்பாடுகள் பற்றியும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தளபதி ராம் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்தார் அதன் விபரம் வருமாறு,

**கேள்வி:-** இந்தக் கடற்கோள் அனர்த்தம் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வட-கிழக்கு மக்களின் புனர்வாழ்வு சம்பந்தமாக விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மானம் மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக தங்களால் விளக்கிக் கூற முடியுமா?

**பதில்:-** தமிழீழ தாயகத்தின் கரையோரப் பிரதேசங்களை தாக்கிய சுனாமி பேரலைகளின் தாக்கத்தால் எமது தமிழ்பேசும் மக்கள் மிகப்பெரும் பாதிப்புக்களையும் சொல்லெணாத் துன்பங்களையும் அடைந்துள்ளனர். இந்த அனர்த்தம் நடந்த உடனேயே எமது தேசியத் தலைவர் தளபதிகள், போரளிகள் அனைவரையும் மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

அதற்கமைவாக நாம் அனைவரும் பணிகளை மேற்கொண்டோம். வடக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலான பகுதிகள் எமது இயக்கத்தின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதி ஆகையால் அங்குள்ள தளபதிகள் பொறுப்பாளர்கள் படையணிகளை ஈடுபடுத்தி உடனடியாக பணிகளை ஆரம்பிக்க முடிந்தது. ஆனால் மட்டக்களப்பு அம்பாறையைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட போரளிகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக இருந்தது. அங்கு எமது அரசியல் பணிபுரியும் போராளிகள் மட்டுமே பணியாற்றிக்கொண்டிருந்தனர் அதிலும் சுனாமி தாக்கிய அன்று அவர்கள் அங்கிருக்கவில்லை.

காரணம் விசேட அரசியல் வகுப்புக்களுக்காக அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் அழைப்பிற்கிணங்க அக்குழுவினர் வன்னி சென்றிருந்தனர். உடனடியாக அவர்கள் செய்தி அறிந்து அவர்களது பகுதிகளுக்குத் திரும்பி வந்தனர். அதற்கிடையில் பாதிப்புற்ற பகுதிகளில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் தமது ஆளணி வளங்களைப் பயன்படுத்தி கனரக வாகனங்களைப் பயன்படுத்தி மக்களை பாதுகாக்கும் பணிகளை மேற்கொண்டனர்.

உண்மையில் அந்த நேரத்தில் எமது மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டமைக்காக ',அவர்களுக்கு நன்றி கூற வேண்டியுள்ளது. அதே வேளை வடமராட்சிப் பகுதிகளில் கடலலைகளால் பாதிப்புற்ற படையினரை எமது போராளிகளும் பாதுகாத்துள்ளனர்.

கல்லடி முகாமில் இருந்து இராணுவம் கடல் அலைகளினால் பாதிப்புற்று காயம்டைந்த வேளையில் கொக்கட்டிச்சோலையில்வைத்து மருத்துவ சிகிச்சை செய்து பாதுகாப்பாக திருப்பி அனுப்பப்பட்டனர். உண்மையில் அந்த இக்கட்டான வேளையில் பரஸ்பரம் மனிதாபிமான உணர்வோடு அனைவரும் செயற்பட வேண்டியுள்ளது. மட்டு- அம்பாறை பகுதிகளில் எமது தளபதிகளான ரமணன், ஜனார்த்தனன், அரசியல்துறைப் பொறுப்பாளாகளான தயாமோகன், கௌசல்யன், குயிலின்பன், குவேனி ஆகியோர் உடனடியாக பணிகளை ஆரம்பித்தனர். 500க்கும் மேற்பட்ட மக்களின் உடல்கள் எமது போராளிகளால் மீட்கப்பட்டது. இடம்பெயர்ந்த மக்கள் வேகமாக எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து கொண்டிருந்தனர்.

சிறப்புத்தளபதி கேணல் பானு உட்பட அனைவரும் வேகமாகச் செயற்பட்டு காயமடைந்த மக்களுக்கான மருத்துவச்சேவை, சமைத்த உணவு விநியோகம், உடுபுடவைகள் வழங்கல் எனப் பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்பட்டது. இதேவேளை, வன்னியிலிருந்து நிவாரணப் பணிகளை முனனெடுக்க பெருமளவு பெண் போராளிகளும் ஆண் போராளிகளும் வந்து சேர்ந்தார்கள்.

அத்துடன் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் பொது அமைபபுக்களும், மக்களும், தொண்டர்களும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்களும் நிவாரணப் பொருட்களோடு வந்திருந்தார்கள். இது எமது பணிகளுக்கு மேலும் பலமூட்டியது. அத்துடன் தெற்குப்பகுதி மலையகப் பகுதி மக்களும் நிவாரணப் பொருட்களோடு வந்திருந்ததால் அவர்களை இடைமறித்த அதிரடிப் படையினர் நிவாரணப் பொருட்களை தம்மிடம் ஒப் படைக்குமாறும், புலிகள் நிவாரணப் பொருட்களை மறித்து தமது முகாமகளுக்கு கொண்டு சென்று விடுவார்கள் என்றும் அம்மக்களுக்கு கூறியபோது அதனை மககள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதிரடிப்படையினரின் வற்புறுத்தலையும், மிரட்டலையும் மீறி அவர்கள் அந்த நிவாரணப் பொருட்களைக் கொண்டு வந்து எம்மிடம் தந்தார்கள். தந்துவிட்டு கூறினார்கள்.

கடந்த வருடம் தெற்கில், மலையகத்தில் மழைவெள்ளம் மண்சரிவு ஏற்பட்டபோது எந்தப் பேதமும் பாராது எமது காலடிதேடி நிவாரணப்பொருட்களோடு வந்த புலிகள் அவர்கள் ஒருபோது மக்களுக்கான நிவாரணப் பொருட்களை பறித்தெடுக்கின்ற வேலையைச் செய்ய மாட்டார்கள் என்கின்ற நம்பிக்கை எமக்கிருந்தது எனக் கூறினார்கள்.

தற்பொழுது எமது போராளிகள் மருத்துவப் பணிகள் பெண்கள், குழந்தைகளுக்கான விசேட கவனிப்புக்கள், பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரைக்குமான மாணவர்களின் கல்வி மேம்பாட்டுப் பணியென பல்வேறு பணிகளை செய்து வருகின்றனர்.

**கேள்வி:-** தமிழீழ விடுதலைப் புலிகளின் புனர்நிமான புனரமைப்பு செயற்பாடுகளின் போது படையினரால் இடையு,றுகள் விளைவிக்கப்படுவதாகவும், புலிகளுக்கும், படையினருக்குமிடையே அடிக்கடி முரண்பாடுகள் நிகழ்வதாகவும் அறியக் கூடியதாக இருக்கின்றது. படையினரின் இத்தகைய நடவடிக்கைகளுக்குக் காரணம் என்னவென்று நினைக்கின்றீர்கள்?

**பதில்:-** காலம் காலமாகவே எமது மக்களின் உரிமைகளைப் பறித்து எமது உரிமைப் போராட்டத்தையும் அழித்துவிடுகின்ற நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் சிங்களப் பேரினவாத அரசு செயற்படுத்தி வந்துள்ளது. என்று அனைவருக்கும் தெரியும் இதேபோலத்தான் அண்மையில் ஏற்பட்ட சுனாமி அலைத் தாக்குதலில் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கான அவசர நிவாரணப் பணிகளை புனர்வாழ்வுப் பணிகளை நாம் மேற்கொள்ளும்போது அதற்கு இடையூறு விளைவிப்பதன் மூலம் ஏற்கனவே உயிர்களையும் உடமைகளையும் இழந்து உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பாதிக்கப்படுகின்றனர்.

போராளிகள் நேரடியாக நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு இடையூறு செய்தல், கல்வி மேம்பாட்டுப் பணிகளை முன் னெடுக்கும்போது மாணவர்களை ஆசிரியர்களை அச்சுறுத்தல் ஆயுதபாணிகளாக நலன்புரி நிலையங்களில் இரவு பகல் பாதுகாப்பு பணி என்ற போர்வையில் நின்று மக்களின் இயல்பான நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல் குறிப்பாகப் பெண்களுக்கான தனித்துவத்தைப் பாதிக்கும் வகையில் நடந்து கொள்ளுதல் என்பன திட்டமிட்ட தமிழின ஆக்கிரமிப்பு நடவடிககையின் இன்னுமொரு வடிவம் அல்லது அதன் தொடர்ச்சி என்றுதான் கூற வேண்டும்.

ஏனெனில் 1983இல் இருந்து அம்பாறை மாவட்டத் தில் பலபடு கொலைகளுக்குக் காரணமான இதே அதிரடிப்படையினர் இந்த சமாதான காலத்திலும் கூட இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுக்க விடாமல் இடையூறு செய்து மக்களின் மனங்களை மேலும் புண்படுத்துவது எமக்கு வேதனையளிக்கிறது.

**கேள்வி:-** களமுனைத் தளபதிகள் எல்லோரும் நின்று அர்ப்பணிப்புடன் மக்களுக்கு சேவையாற்றுகின்றீர்கள். படையினரின் இத்தகைய செயற்பாடுகள் உங்களின் பணிகளுக்கு இடையூறாக அமையுமிடத்து தங்களால் எத்தகைய மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது பற்றி கூற முடியுமா?

**பதில்:-** எமது போராட்டம் மக்களுக்கானது. மக்களைப் பெருமளவு பாதித்த இச்சம்பவம் என்றுமில்லாதது எம் அனைவருக்கும் ஆழ்ந்த மனக்கவலையை ஏற்படுத்தியுள்ளது. நீண்ட காலமாக இராணு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் தமது சொத்து சுகங்களை, உயிர்களை இழந்து துன்பப்பட்ட மக்கள் இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்புக்களைச் சந்தித்துள்ள இவ் வேளையில் எமது பணிகளுக்கு இராணுவத்தினர் மூலமாக இடையூறுகள் ஏற்படும்போது மக்களின் நலனுக்காக எமது பேராளிகள் மிகவும் பொறுமைகாத்து வேலைகளை முன்னெடுத்து வருகின்றனர். நாம் விசேட அதிரடிப் படை அதிகாரிகளுடன் பல முறை சந்திப்புக்களை நடத்தியுள்ளோம்.

எமது அரசியல்துறைப்பொறுப்பாளர்கள் கௌசல்யன், குயிலின்பன் ஆகியோர் நெருக்கடி நிலைமைகள் தோன்றும்போது படை அதிகாரிகளைச் சந்தித்து சுமுகமான சூழலை உருவாக்க முயற்சிகள் செய்து வருகின்றனர். ஆனால் இந்த நெருக்கடி மிக்க காலத்தில் படைத்தரப்பினர் புரிந்துணர்வுடன் செயற்பட முயற்சிக்காமல் மீண்டும் மீண்டும் எங்களுக்கும் மக்களுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்துவது எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளில் கூட பாதிப்புக்களை ஏற்படுத்தும் வா[illegible]ப்புள்ளது.

**கேள்வி:-** மட்டு-அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் இந்த கடல்கோள் அனர்த்தம் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் குறிப்பாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்களைப் பொறுத்தவரை சிறிலங்கா அரசியல் போதியளவு அரசியல் பலம் இல்லாத காரணத்தினால் கிடைக்கப்பெறும் அரச நிவாரணம் மற்றும் ஏனைய உதவிகள் பற்றி மக்கள் மத்தியில் பெரும் ஐயம் நிலவுகின்றது.

இது முறையாக கிடைக்க விடுதலைப்புலிகளால் எத்தகைய முயற்சி மேற்கொள் ளப்படுகின்றது என்பதுபற்றிக் கூறமுடியுமா?

**பதில்:-** அம்பாறை மாவட்டத்தில மூன்றாவது சிறுபான்மை இனமாகவே இன்று தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இதனால் அரசியல் ரீதியான பலம் மற்றைய மாவட்டங்களைப்போல் இங்கு இல்லை. என்பது உண்மைதான். அரச அதிபர் தொடக்கம் அரச அதிகாரிகள் பலரும் பெரும்பான்மை சமூகங்களை சேர்ந்தவர்களாகவே உள்ளனர். தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் அவர்களும் சுனாமி அலைகளினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபடியே மக்களுக்கும் சேவையாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் சுனாமி அனர்த்தத்தின் பின்பு மேலதிக அரச அதிபராக ஒரு தமிழர் நியமிக்கப்பட்டு இருப்பது நல்ல விடயம்தான். ஆனால் அவரின் பணிகள் வேகமாகவும், சிறப்பாகவும் அமையவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**கேள்வி:-** எமது மாணவர்களின் கல்வி வளங்கள் பாதிக்கப்பட்டு அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும் இந்த கடல்கோள் அனர்த்தம் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. இவர்களது கல்வி மேம்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுக்க தங்களால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பற்றியும், தேவைகள் பற்றியும் கூற முடியுமா?

**பதில்:-** மட்டு- அம்பாறை மாவட்டங்களைப் பொறுத்தவரை கடந்த காலங்களில் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் பல கிராமங்கள் முற்றாகவே கல்வியில் பாதிப்புக்களைச் சந்தித்துள்ளன. அதே வேளை, சுனாமித் தாக்கத்தினால் பல பாடசாலைக் கட்டடங்கள், தளபாடங்கள் முற்றாக அழிந்து போயுள்ளன. பல மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். பாடசாலைகளே பல இடங்களில் மக்களின் நலன்புரி நிலையங்களாக உள்ளதால் பாடசாலைகளை உரிய காலத்தில் ஆரம்பிக்க முடியாதுள்ளது. இதனால் மாணவாகளின் கல்வி பாதிப்புக்குள்ளாகிறது.

அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் வேறு உயர்கல்வி மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் கூட பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். இந்நிலையில் கல்வ்யை மேம்படுத்த நாம் பலமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கான இலவச வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நலன்புரி நிலையங்களில் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்களுக்கான உதவித்திட்டம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஆரம்பித்துள்ளது. அதுவும் ஒரு நல்ல முயற்சி. இவ்வாறாக எதிர்காலங்களில் எமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் அனைவரும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

**கேள்வி:-** எமது மண்ணில் அன்னியப் படையினர் மனிதாபிமான ரீதியில் உதவுவதற்காக வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இருந்தாலும் மக்கள் மத்தியில் இவர்கள் மீது ஒரு விதமாக சந்தேகம் எப்பொழு தும் இருந்துகெண்டே இருக்கிறது. இது தொடர்பாக தங்களின் கருத்தை அறிய முடியுமா?

**பதில்-** மட்டு-அம்பாறை மாவட்டங்களில் வெளிநாட்டுப் படையினர் பல பணிகளில் ஈடுபட்டு வருவதனை எம்மால் அவதானிக்க முடிகிறது. அவர்கள் சுனாமி அனர்த்த மனிதாபிமானப் பணிகளை ஆற்றுவதற்காகவே தாம் வந்துள்ளதாகவும் அப்பணிகளை முடித்துக்கொண்டு தமது நாடுகளுக்குச் செல்வதாக கூறுவதை ஊடகங்கள் மூலமாக அறிய முடிகிறது. நாமும் அவர்கள் கூறியதுபோலவே செயற்படுவார்கள் என்று நினைக்கின்றோம்.(ப-4)

## சுனாமியால் இலங்கைக்கு ஏராளமான வருமானம்

# இதுவரை 13,694 கோடி ரூபா கிடைத்துள்ளது

# மேலும் 45,462 கோடி ரூபா கிடைக்கவுள்ளது

## திறைசேரி வட்டாரங்கள் தகவல்

**கடல்கோள் அனாத்தத்தால் இலங்கைக்கு 13ஆயிரம் கோடி முதல் 15 ஆயிரம் கோடி ரூபாவரையிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளதென இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ள நிலையில், அனர்த்தத்தையடுத்து இதுவரை இலங்கைக்கு 13 ஆயிரத்து 694 கோடி ரூபா வெளிநாட்டு உதவிகள் கிடைக்கபபெற்றுள்ளதாக திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

கடல்கோள் அனர்த்தத்தால ஏற்பட்டுள்ள தேசங்களை மீண்டும் புனரமைக்க இதுவரை 13ஆயிரத்து 694 கோடி ரூபா வெளிநாட்டு உதவிகள் இலங்கையை வந்தடைந்துள்ளன. இதறகு மேலதிகமாக அவசர புனரமைப்புப் பணிகளுககாக கடன உதவியாக மேலும் 45ஆயிரத்து 462கோடி ரூபா நிதியை எதிர் வரும் நாட்களில் இலங்கைக்கு வழங்குவதாக வெளிநாடுகளும் மற்றும் பல அமைப்புகளும அரசிற்கு உறுதியளித்துள்ளன.

இதேவேளை, அனர்த்தத்தால் இலங்கைக்கு 13 ஆயிரம கோடி முதல 15 ஆயிரம் கோடிரூபாவரையிலான சேதங்கள் ஏற்படடுள்ளதென கணிப்பிடப்படடிருப்பதாக இலங்கை மத்திய வங்கி அண்மையில் தெரிவித்தது.

அதறகமைய இலங்கையில் ஏற்பட்டுள்ள அழிவை பூர்த்தி செயயக் கூடியளவிலான நிதித் தொகை இலங்கைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறிய முடிகிறது. அத்தோடு இதற்கு மேலதிகமாகப் பல கோடிரூபா பெறுமதியான பொருட்களிலான உதவிகளை வெளிநாட்டுகளும, வெளிநாட்டமைப்புகளும் இதுவரை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதென திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதைவிட அனர்த்தத்தை யடுத்து சர்வதேச நாணய நிதியம் 2ஆயிரத்து 500 கோடி ரூபாவையும், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆயிரம் கோடி ரூபாவையும் உலக் வங்கி 500 கோடிரூபாவையும் நிதி உதவிகளாக இலங்கை அரசிற்கு வழங்கியுள்ளன.

மேலும், ஜப்பானிடமிருந்து 2ஆயிரத்து 560கோடி ரூபா, இந்தியாவிடமிருந்து 2,724 கோடி ரூபா, அமெரிக்காவிடமிருந்து 134 கோடி ரூபா, நோர்வே அரசிடமிருந்து 115கோடி ரூபா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து 1400 கோடி ரூபாவும் வெளிநாட்டு உதவிகளாக இலங்கை அரசு பெற்றுள்ளதாகவும் மேலும் பல வெளிநாடுகளும், வெளிநாட்டமைப்புகளும் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்க உறுதியளித்துள்ளதோடு, எதிர்காலத்தில் அவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ப)

## கிழக்கு மாகாணத்தின் தளபதிகள் தலைவர் பிரபாவுடன் சந்திப்பு

விடுதலைப் புலிகளின் திருகோணமலை தளபதி கேணல் சொர்ணம், மட்டக்களப்பு தளபதி கேணல் பானு ஆகியோர் விமானப்படையின் விசேட ஹெலி கொப்டர் மூலம் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு சென்றுள்ளனர்.

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தில் புனர்நிர்மாண மீள்கட்டுமானப்பணிகளை மேற்கொள்வது குறித்து தேசியத் தலைவர் வே. பிரபாகரன் உடன் கலந்துரையாடுவதற்காகவே தளபதிகள் இருவரும் கிளிநொச்சிக்கு சென்றுள்ளதாக புலிகளின் அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தலைவருடனான தளபதிகளின் சந்திப்பு மாலைவரை நடைபெற்றதாகவும் தேசியத் தலைவருடனான இக்கலந்துரையாடலில் மூத்த தளபதி நாகேஸ், மற்றும் முக்கிய உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது. (ப)

## பெண் கொலை

(பொலறுவை)

பொலநறுவைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை பெண்ணொருவர் பாலியல் துஷ்பிரயோகததுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்துடன் இருவர் தொடர்புடையவர்களாக இருப்பதாக பொலிஸார் தெரித்தனர்.

(த-8)

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிராமிய அபிவருததித் திணைக்களத்தினால் 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் நடத்தப்படவிருநத மகளிர் அபிவிருத்தி நிலையங்களுக்கான பரீட்சைகள் யாவும் பிற்போடப்பட்டுள்ளன. அப்பரீட்சைகள் யாவும் பெப்ரவரி மாதம 12, 13ஆம் திகதிகளில நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கிராமிய அபிவிருத்தி உத்தியோகஸ்தா தெரிவித்துள்ளார்.

(ப-5)

## முல்லை மாவட்ட அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

சுனாமிப் பேரலை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடல் முல்லைத்தீவு மாவட்ட அரசியல துறை காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக இவ்வாண்டில் முன்னெடுக்கப் பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து ஆராய்ப்பட்டது.


தமிழீழ விடுதலைப்புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.முகுந்தன் மற்றும் வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் கே.செல்வநாயகம் உட்பட பலர் இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இதற்கிடையில் தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியினால் இடம்பெயர்ந்த மக்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதேசமயம் சேதமடைந்த பாலங்களைத் திருத்தும் வேலைதிட்ட ஆரம்பப்பணிகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-9)

# சம்பியன் பட்டம் வென்றார் சபன் சாதிக்கத்தவறினார் லேடன் ஹெவிட்

மாரட்சபன் முதன் முறையாக அவுஸ்திரலிய ஓபன் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். சொந்த மண்ணில் களமிறங்கிய லேடன் ஹெவிட் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்து சாதிக்கத் தவறினார். முதல் பட்டத்தை நோக்கி 2005ஆம் ஆண்டில் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான





அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் நேற்று முன்தினம் முடிவடைந்தது. நூற்றாண்டு விழாக்காணும் இத்தொடரில் கடைசிக் கட்டமாக ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி மெல்போர்னில் நேற்றுமுன்தினம நடந்தது. மூன்றாம் நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் லேடன ஹெவிட, நான்காவது இடத்தில இருக்கும் ரஷ்யாவின் மாரட் சபனை எதிர்த்து விளையாடினார்.

இரு வீரர்களும் இதுவரை அவுஸ்திரேலிய ஓபன் சம்பியன் பட்டத்தை வென்றதில்லை. இதனால் முதன் முறையாக பட்டத்தை கைப்பற்றும் நோககத்துடன் களமிறங்கினர். முதல் சுற்றில் ஹெவிட் ஆட்டம் அபாரமாக இருந்தது. மூன்றாவது சுற்றில் இவர் சபன் சர்வீசை வீழ்த்தி முன்னிலை பெற்றார். பினனர் சிறப்பாக ஆடிய சபன் இரண்டாவது செட்டை கைப்பறறினார். மீண்டும் மூன்றாவது செற்றில் ஹெவிட் ஆதிககம் மேலோங்கியது. துவக்கத்திலே இவா சபன் சர்வீசை பின்தள்ளி 3-0என்ற கேம் கணக்கில் முன்னிலை பெற்றார். இந்நிலையில் சபன தனது முழுத் திறமையையும் வெளிப்படுத்தத் துவங்கினார்.

இவரது விரைவான செறகளில் திணறிப்போனார் ஹெவட. இதனால மூன்றாவது செற்றை 6-4 என்ற சுற்று முன்னிலையில் வெற்றிபெற்ற இவா நான்காவது செற்றையும் கைப்பற்றினார். 2 மணிநேரம் 45நிமிடங்கள் நடந்த இப் போட்டியில் சபன் 1-6,6-3, 6-4, 6-4, எனற செறகளில் ஹெவிட்டை வீழ்தது சம்பியன் பட்டத்தை கைப்பறறினார். சபன் கைப்பற்றும் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம இது. இதற்கு முன் 2000ல் இவர் யு.எஸ்.ஓபன் தொடரில் அமெரிக்காவின் பீட் சம்பராசை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றுள்ளார். 2002, 2004 இரண்டுமுறை அவுஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் தோல்வி அடைந்த இவர், இம்முறை பெரும் போராட்டதிற்குபின் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். சொந்த மண்ணில் களமிறங்கிய ஹெவிட தோல்வி, அடைந்ததன் மூலம் சாதனை படைக்கத் தவறினார். இத்தொடரில் அவுஸ்திரேலிய வீரர் ஒருவர் சம்பியன் பட்டம் வென்று 29 ஆண்டுகள் ஆகிறது. 1976ல் மாாக் எட்மான்ட்சன் கடைசியாக சம்பியன் ஆனா இந்த சாதனையை முறியடிக்கும் வாய்ப்பைக் கடைசி கட்டத்தில் நழுவவிட்டார் ஹெவிட.

கலப்பு இரட்டையர் சம்பியன் பட்டத்தை அவுஸ்திரேலிய ஜோடி கைப்பற்றியது. நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் அஸ்திரேலியாவின் ஸகாட்டிராபர், சமந்தாஸ்டோசர்



ஜோடி 6-2, 2-6, 7-6என்ற செற்களில் சிம்பாப்வேயின் கெவின் உல்யெட், தென்னாபிரிக்காவின் லீசெல்ஹூபர் ஜோடியை போராடி வீழ்த்தியது. யூனியர் ஆண்கள் இறுதிப் போடடியில் முதல்நிலை வீரரான தென் கொரியாவின் கிம சென்யாங் அமெரிக்காவின் டொனால்ட் யங்கை சந்தித்தார்.

இரண்டாம் நிலை வீரரான டொனால்ட் 6-2, 6-4என்ற நேர் செறகளில் கிம்சன்னை வீழ்த்தி, சம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வெல்லும் மிக இளம வீரர் என்ற சாதனையைப் படைத்தார். யூனியர் பெண்கள் பிரிவில் பெலாரசின் விக்டோரியா அஸாரென்கா 6-2, 6-2என்ற செற்களில் ஹங்கேரியின் ஏக்னெஸ் ஸாவேயை வென்று சம்பியன் ஆனார். (ப-19)

## 19 வயதுக்குட்பட்டோருக்கான டெஸ்ட்

# 293 ஓட்ட வித்தியாசத்தில் இங்கிலாந்தை இந்தியா வென்றது

இந்தியா, இங்கிலாந்து இடையிலான 19 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டி கல்கத்தாவில் நடக்கிறது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 147ரன்களில் சுருண்டது. பதிலுக்கு இந்திய அணி 8 விக்கெற் இழப்புக்கு 410ரன் எடுத்த நிலையில் டிக்ளே செய்தது. பின்னர் 263 ரன்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்சை துவக்கியது இங்கிலாந்து. மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் இந்த அணி 6 விக்கெற் இழப்புக்கு 140 ரன்களுடன இருந்தது. நான்காவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் கூடுதலாக 17 ரன் எடுத்த நிலையில் மீதமுள்ள 4 விக்கெற்றுக்களையும் இழநதது இங்கிலாந்து. இரண்டாவது இன்னிங்சில் இந்த அணி 157 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்து சிறப்பாக பந்துவீசிய சாவ்லா 4 விக்கெற்றைக் கைப்பற்றினார். இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 106 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 2-0 என்ற முன்னிலையில் கைப்பற்றியது. முன்னதாக பெங்களூரில் நடந்த முதல் போட்டியில 293ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ப-19)

# வி.பி.கிண்ண முத்தரப்பு தொடரின் லீக்கை பாகிஸ்தான் வென்றது

வி.பி.கிண்ண முத்தரப்பு கிரிக்கெற தொடரின் லீக் ஆட்டத்தில பாகிஸ்தான் அணி அப்துல் ரசாக்கின் அபார ஆட்டத்தினால மூன்று விக்கெட்டுககளால் அவுஸ்திரேலியாவை வென்றது.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவு அணிகள் மோதும் முத்தரப்பு கிரிக்கெற் தொடரின் லீக போட்டி நேற்று முன்தினம் பெர்த் நகரில் பகல இரவு ஆட்டமாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெனற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுததாட தீர்மானித்தது. ஹெடன் 6 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்து செல்ல கில்கிறிஸ்ட் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 47 ஓட்டங்களைபெற்று ஆட்டமிழந்தார்.

இதன் பின் வந்தவர்கள் சீரான இடைவெளியில வெளியேற அவுஸ்திரேலிய அணி 7 விக்கெற் இழப்புக்கு 192ரன்கள என்ற இக்கட்டான நிலையை அடைந்தது. இளம் வீரர் மைக் கேல்கிளார்க் பொறுப்புடன் ஆடி மீண்டும் ஒருமுறை அணிக்கு கைகொடுத்தார்.

அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் ஆரம்பத்தில் 3 விக்கெற்றுக்களை இழந்து. யூசப் யுகானா பொறுப்புடன் ஆடி 72 ஓட்டங்களைப் பெற்று அணிக்கு கைகொடுத்தார். இவர் வெளியெற பாகிஸ்தான் அணி 6விக்கெற் இழப்புகது 170ரனகளுடன் இருந்தது.

இந்நிலையில் அப்ரிடி விளாசல் ஆட்டம் ஆடினார். இவர் 13 பந்துகளில் 30ஓட்டங்களை குவிக்க பாகிஸ்தான் அணிக்கு வெற்றி வாய்ப்புக்கிடைத்தது. 47.2ஓவரில் பாகிஸ்தான் 7விக்கெற் இழப்புக்கு 268ரன்கள் எடுத்து வெற்றிபெற்றது. (ப-19)

ஆற்றாரும் ஆற்றி அடுபஇடன் அறிந்து
போற்றார் கண் போற்றிச்செயின் - குறள்

**வலம்புரி**

# நிவாரணப் பணிகளை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும்

கடல்கோள் அனர்த்தம் ஏற்படுத்திய பேரழிவில் சிக்குண்ட மக்களுக்கு உதவி செய்வது சகலரதும் கடமையாகும். யாருமே எதிர்பாராத சம்பவமாக இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய அழிவிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் நிவாரணக் கொடுப்பனவுகள் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் இருந்து வந்த வண்ணம் உள்ளன.

எனினும் நிவாரணக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைகின்றனவா? என்ற கேள்விக்கு "ஆம்" என்ற பதிலை நிறுதிட்டமாகக் கூறிவிட முடியாது.

கடல்கோள் அனர்த்தம் ஏற்படுத்திய பாதிப்பினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, உடுபுடைவை வழங்கப்பட்ட போதிலும் நிதிக் கொடுப்பனவில் அரசின் வேகம் போதாமலே உள்ளது.

இதற்கிடையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தில் பங்குபோடும் அரச அதிகாரிகள், அமைச்சர் என பலர் இனங்காணப்பட்டுள்ளனர்.

மிகப்பெரும் பேரவலம் நடந்து பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியானதை நேரில் கண்டபோதிலும், அந்த பாதிப்பை அனுபவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கான நிவாரணத்தில் பங்குபோடுபவர்கள் எத்தகைய மனப்பக்குவமுடையவர்கள் என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

எதுவாயினும் இத்தகைய மோசடிகள் இடம்பெறுவதற்கு அனுமதிப்பது என்பது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதன்று. எனவே, இது விடயத்தில் சகலரும் விழிப்போடு இருப்பது தேவையான ஒன்றாகும்.

அதிலும் கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான நிவாரணப் பணியில் அரசின் நடவடிக்கைகள் எந்தளவு தூரம் நேர்மைத் தன்மையுடையதாக இருக்கும் என்ற ஐயம் மக்களிடையே ஏற்படவே செய்கின்றது.

இயற்கை அனர்த்தம் இன, மத, மொழி என்ற வேறுபாடுகளைக் கடந்து அழிவை ஏற்படுத்தியிருப்பதை அனைத்துத் தரப்பும் உணர்ந்துகொள்ள வேண்டும். அவ்வாறு உணர்ந்து கொள்ளும்போது வெளிநாடுகளில் இருந்து வரும் நிவாரணங்கள் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உரியதென்ற உண்மை தெரியவரும்.

வெளிநாடுகளில் இருந்து வருகின்ற நிவாரணக் கொடுப்பனவுகளின் இன, மத, மொழி வேறுபாடுகள் முன்னிற்குமாயின் அதன் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பதில் எந்த ஐயுறவும் இல்லை.

எனினும், மோசடிகள் இடம்பெற்ற பின்னர் குற்றஞ்சாட்டுவதைவிட, மோசடிகள் இடம்பெறாமல் தடுப்பது மேலானது - நன்மை தரக்கூடியது. எனவே இது விடயத்தில் வடக்கு கிழக்கை பிரதி நிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து விசேட குழுவொன்றை அமைத்து கொள்வது அவசியமாகும்.

அவ்வாறு வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமையுமாயின் அந்தக் குழு வெளிநாடுகளில் இருந்து கிடைத்த நிவாரணம் பற்றிய தரவுகளை திரட்டிக் கொள்ள முடியும்.

அத்தோடு நிவாரணப் பணியில் பங்கேற்ற வெளிநாடுகளின் தூதுவராலயங்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணப் பணி பற்றிய தகவல்களை உடனுக்குடன் பரிமாறக் கூடியதாக இருக்கும்.

அரசின் ஒரு பக்கம் சார்ந்த சாய்வு காரணமாக இந்த நாட்டில் இருபது வருடமாக யுத்தம் நடந்து வருகின்றது. அந்த யுத்தத்திற்கு தீர்வுகண்டு நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்திய முடியாத அரசினால் கடல்கோள் அனர்த்தம் ஏற்படுத்திய அழிவுகளை ஈடுசெய்வதற்கான நிவாரணப் பணிகளில் சமத்துவம் இருக்கும் என எதிர்பார்ப்பது மிகப் பெரும் தவறாகும்.

இதனை சில வெளிநாடுகள் உணர்ந்துகொண்டு அதற்கேற்றவாறு தமது நிவாரணப் பணிகளை திட்டமிட்டுள்ளனர். ஆயினும் சில நாடுகள் அரசிடமே நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குகின்றன.

நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்குகின்ற நாடுகளைப் பொறுத்தவரை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் கிடைக்கவேண்டும் என்பதே அந்த நாடுகளின் நோக்காகும். இருப்பினும் அந்த நோக்கம் நிறைவேறாமல் போகக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு என்பது வெளிப்படுத்தப்படவேண்டிய தொன்றாகும்.

இவ்விதம் வெளிப்படுத்தப்படும்போது நிவாரணப் பணியில் ஈடுபட்ட நாடுகள் நிவாரண விநியோகத்திலும். கவனம் எடுக்க, அங்கு ஓர் சம பகிர்வு சாத்தியமாகும்.

## பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியினால்

# அரசு - புலிகள் தரப்புகளிடையே இன்னும் இணக்கம் காணப்படவில்லை


(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வட கிழக்கு பகுதியில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக பொதுக் கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகளில் இன்னமும் இறுதி இணக்கம ஏற்படவில்லை.



இது குறித்து கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரின் இல்லத்தில் அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்ததன பாலவுக்கும், புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுக்குமிடையில் 7 சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுள்ள போதிலும் பொதுக் கட்டமைப்பு அமைப்பது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்பட வில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது.

பொதுக் கட்டமைப்புக்கான பேச்சுவார்த்தை முன்னேற்றகரமாக அமைந்துள்ள போதிலும் சில விடயங்களில் இணக்கம் ஏற்படவில்லை என நம்பகரமாக தெரிய வருகின்றது.



பொதுக கட்டமைப்பில் மாவட்ட ரீதியாக 11 பேரை உள்ளடக்கவும், இதில் 9 தமிழர்களும், 3 முஸ்லிம்களும், 2 சிங்களவர்களையும உள்ளடக்கும் விதத்தில் கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பிலேயே பேச்சுக்கள் இடம் பெற்று வருகின்றது.

இப்பேச்சு வார்த்தை தொடர்ந்தும் நடைபெறவுள்ளது. அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தன பால வெளிநாடு சென்றுள்ளமையினால் தடைப்பட் டுள்ள இப்பேச்சுக்கள் அவர் சில தினங்களில் நாடு திரும் பியதும் கட்டமைப்புக்கான பேச்சுத் தொடரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள

# வன வளத்தை அழிப்போர் மீது நடவடிக்கை

# மட்டு.- அம்பாறை வன வளப்பிரிவினர் எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் சட்ட விரோதமாக வன வளங்களை அழிக்கும் நடவடிக்கைளில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு, அம்பாறை வனவளப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வனவளப் பிரிவினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது தமிழீழ பிரதேசத்தின் வனவளங்களை அரசாங்கம் போர் நடவடிக்கைகளினால் திட்டமிட்டு அழித்து வருகின்றது. அவ்வாறு தமிழீழ பிரதேசமெங்கும் வாழும் மக்களும் வனங்களின் அருமை மற்றும் பெருமையை தெரிந்து கொள்ளாது சிறு தேவைகளுக்காக பெரிய மரங்களை முற்றாக அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எமது தேசத்தில் இயற்கை வளமாகிய வனத்தினை பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும். இதன் பொருட்டு தமிழழ வனவளப் பாதுகாப்பு பிரிவு தமிழீழ தேசத்தின் வளங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில், அகப்புற அனர்த்தங்கள் காரணமாக அழிந்துள்ள வளங்களின் வகையினை ஈடு செய்யவும், நல்லன மரங்களை உருவாக்கும் பொருட்டும் 'மீள்வள மாக்கல்'' திட்டம் ஒன்றினை அமுல்படுத்தி வருகின்றது.

இதனால் தமிழீழ தேசமெங்கும் மரங்கள், தடிகள், விறகுகள் என்பனவற்றினை வெட்டும் நடவடிக்கைகள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் புலிகள் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

எதிரகாலத்தில், தமிழீழ வனவளப் பாதுகாப்பு பிரிவினது செயற்றிட்டங்களுக்கு மாறாக வனவளத்தினை அழிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ப)

## இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட இரு உலங்கு வானூர்திகளை

# மீளக் கொண்டு செல்ல உரிமையாளர் இணக்கம்

# விடுவிப்பதற்கு விமானப்படையினர் தயக்கம்

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்படட உலங்கு வானூர்திகளில் ஒன்றை மீளக் கொண்டு செல்ல அதனை இறக்குமதி செய்த அரச சார்பற்ற அமைப்பு இணங்கியுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனத்தினால் அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட உலங்கு வானூர்தியை மீண்டும் கொண்டு செலவதற்கு அவர்கள் இணங்கியிருப்பதாக சட்டம், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

மற்றைய உலங்குவானூர்தி தொடர்பான் விசாரணைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட உலங்கு வானூர்திகள் இரண்டை சிறீலங்கா விமானப்படையினர் கட்டு நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கடந்த 22ஆம் திகதி கைப்பற்றினார்கள்.வெளிநாட்டு உதவிகளை கொண்டு வரும் போர்வையில் இந்த உலங்கு வானூர்திகள் கொண்டு வரப்பட்டதாக விமானப்படை தெரிவிக்கின்றது.

இந்த இரண்டு உலங்கு வானூர்திகள் இரண்டும் கடந்த 18, 19ம் திகதிகளில் பிரான்ஸ், அமெரிக்க ஆகிய நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்டன. எனினும் அவற்றை விமான நிலையத்திலிருந்து விடுவிப்பதற்கு விமானப்படை மறுப்பு தெரிவித்தது.

விமானப்படை மேற்கொண்ட விசாரணைகளின் போது இவை அரச சார்பற்ற நிறுவனங்களால் கொண்டு வரப்பட்டமை தெரியவந்துள்ளது.ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையிலேயே இந்த உலங்கு வானூர்திகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## திருட்டுத் தனமாக மரம் தறிப்பு தொடர்கிறது

# கிராம சேவையாளரிடம் கெற்பேலி மக்கள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

கெற்பேலிய புதிய வீடமைப்புத் திட்டத்தில் காணப்படும் பயனுள்ள மரங்களை அப்பகுதிக்கு வரும் வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள் திருட்டுத்தனமாக வெட்டிச் செல்வதாக அப்பகுதி மக்கள் கிராமசேவையாளர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதே சமயம் திட்டக்காணியில் காணப்படும் ஏனைய பயனுள்ள மரங்களை மரத்திருடர்கள் தொடர்ந்து வெட்டிச் செல்லாமல் இருக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மேற்படி பொது மக்கள் பொது வேண்டுகோள் விடுத்துள்ளனர் எனத் தெரியவருகிறது. (ப-16)

# கலந்துரையாடல்

வலுக்கையாறு புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 5ஆம் திகதி காலை 10 மணிக்கு உடுவல் கமநல சேவைகள் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும் தீர்மானஙகளுக்கு அமைவாகவே புனரமைப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (ப-19)

## தினசரி தியானம்

# விவேகச் சிந்தனைகள்

இந்த உலகில் உள்ள நன்மை மற்றும் தீமையின் மொத்த அளவைப்பாருங்கள் ஏதாவது மாறறம் உள்ளதா? பனனெடுங காலம கழிந்து விட்டது. செயல்முறை மதமும் பனனெடும் கால மாக இருந்து வருகிறது ஒவ்வொரு முறையும் பிரச்சினைக்கு தீாவு கிடைத்துவிடும் என்று உலகம் நினைததது. ஆனால் அதே பிரச்சினை தான் இன்றும உள்ளது அதன் உருவம் வேண்டுமானால் மாறலாம். அதை ஓரிடத்தில் இருந்து விரட்டுங் கள். மற்றோர் இடத்திற்கு போகிறது.

சுவாமி விவேகானந்தர்

# சுனாமி அருங்காட்சியகம் அமைப்பதற்கு அரசு முடிவு

(கொழும்பு)

சுனாமி கடல்அலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சேதமடைந்த நிலையில் காணப்படும் பொருட்களை ஒன்று சேர்த்து அரும்பொருள் காட்சியகம் ஒன்றை நிர்மாணிக்க கலாசார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த இயற்றை சீற்றத்தின் கோரத்தை அடுத்த சந்ததியினர் அறிந்துகொள்வதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

கிழக்கிலும் தெற்கிலும் இரண்டு அருங்காட்சியகங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இவற்றுள் வைக்கப்படவுள்ள பொருட்களை சேகரிப்பதற்கு பிரதேச செயலகங்கள் ஊடாக விசேட திட்டமொன்று அமுல்செய்யப்படும் என அருங்காட்சிசாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# வவுனியாவில் மாணவி கடத்தப்பட்டார்

(வவுனியா)

வவுனியா பிரபல மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் தனியார் வகுப்புக்குச் சென்று திரும்பிவரும்போது கடத்தல்காரர்களால் ஆட்டோவில் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அவரை விடுவிக்க கடத்தல்காரர்கள் 25 இலட்சம் ரூபாவை கப்பமாகக் கோரியிருப்பதாக வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை தனியார் வகுப்புக்குச் சென்ற தனது 13 வயது மகள் வீடுதிரும்பவில்லை என்று காணாமல் போன மாணவியின் தந்தை வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கிறார்.

குறிப்பிட்ட மாணவியின் பெற்றோருடன் தொலைபேசியில் தொடர்புகொண்ட இனந்தெரியாத கடத்தல்காரர், கடத்தப்பட்ட சிறுமியை விடுவிக்க 25 இலட்சம் ரூபா தருமாறு பேரம்பேசி இருக்கின்றனர்.

இச்சம்பவம் வவுனியாவில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. (4)

# மட்டக்களப்பு - திருமலையில் புகையிரத ஊழியர் போராட்டம்



திருமலையில் நடைபெற்ற மறியற்போர்.

(திருகோணமலை)

சுனாமிப்பேரலையால் ஏற்பட்ட இழப்பிற்குத் தமக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து திருகோணமலை புகையிரதநிலைய ஊழியர் விடுதிகளிலுள்ள ஊழியர்களின் குடும்பத்தினர் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தண்டவாளத்தில் ஏறிநின்று இவர்கள் மறியலில் ஈடுபட்டதால் புகையிரதசேவைகள் சில மணிநேரம் தடைப்பட்டது.

மாவட்ட செயலக அதிகாரிகள் மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கப்பாடு எட்டப்பட்டது. இதனால் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு புகையிரதக் கடவையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் 500 இற்கு மேற்பட்ட கடவைத் தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்று மறியலில் ஈடுபட்டனர். இதனால் புகையிரத சேவைகள் 5 மணிநேரம் தடைப்பட்டது.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுதிமொழியை அடுத்து பேராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. (ச)

# நிவாரண குழுக்...

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்புரைக்கமைய மேற்படி குழுவில் பிரதேச செயலாளர் வி.கே.தவராஜா தலைமையில் பொலிஸ், இராணுவம், விசேட அதிரடிப் படை, விடுதலைப்புலிகள் மற்றும் மதப் பிரமுகரென 6 பேர் அங்கம்வகிக்கின்றனர்.

இன்று நடைபெறவிருக்கும் அம்பாறை மாவட்ட ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக நேற்று முற்பகல் இக்கூட்டம் கூட்டப்பட்டது.

கூட்டம் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் எதிர்பாராத வகையில் திடீரென ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ச அங்கு நுழைந்தார். விடுதலைப்புலிகள் தரப்பில் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் இதற்கு ஆட்சேபனை தெரிவித்தார். அப்போது ஜே.வி.பி. உறுப்பினரைநோக்கி அழைப்பின்றி எவ்வாறு கூட்டத்திற்கு வருகைதந்தீர்கள் என்று அவரை நோக்கி கௌசல்யன் கேள்வி எழுப்பினார்.

தான் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்ததாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார். இதனையடுத்து விடுதலைப்புலிகள் இந்த கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டனர்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்துவெளியிட்ட விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன், குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏற்கனவே ஒருதடவை நிவாரண உதவி என்ற போர்வையில் இப்பகுதிக்கு வந்து இனவாத அடிப்படையில் பேசியுள்ளார். வடக்குக் கிழக்கு பிரிக்கப்படவேண்டும் என்று பிரசாரங்களையும் மேற்கொண்டுள்ளார். எமது தேசியத் தலைவரின் படங்களை அகற்றவேண்டும் என்று அரசாங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அது மட்டுமன்றி குறிப்பிட்ட குழுவில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அங்கத்துவம் வழங்கப்படவில்லை. அதனை மீறி அவர் நடந்துகொண்டதால் நாம் வெளியேறினோம் என்றார்.

இது தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலாளர் வி.கே.தவராஜாவிடம் கேட்டபோது, எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தான் அழைப்புவிடுக்கவில்லை என்பதை, குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரிடம் தான் வலியுறுத்திக் கூறியபோதிலும் அதனை மீறும்வகையில் அவர் நடந்துகொண்டதாகக் கூறினார்.

விடுதலைப்புலிகள் வெளியேறினாலும் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றுள்ளது. ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் அதில் கலந்துகொண்டுள்ளார். பிரதேச செயலகத்திலுள்ள தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் அகற்றப்படவேண்டும். இல்லையேல் ஒரு மாத காலத்திற்குள் இடமாற்றம் வழங்கப்படுமென அவர் பிரதேச செயலாளருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளாரென மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது. (த)

## உயர்...

படுத்தியதன்மூலம் தமது அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் தமது மனுவில் தெரிவித்திருக்கின்றனர். அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் காணப்படும் விவசாய நிலங்களை பாதுகாப்புக் காரணங்களுக்கான மீண்டும் விவசாயம் செய்வதற்கு வழங்கமுடியாது என்றும், அதற்குப் பதிலாக மாற்று இடங்களை அவர்களுக்கு வழங்க அரசு தீர்மானித்திருப்பதாகவும் சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்த மேலதிக விபரங்களை எதிர்வரும் மார்ச் 23 ஆம் திகதி உயர் நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு மனுதாரர்களை உயர் நீதிமன்றம் கேட்டுள்ளது. (த-04)

# தலைவர் பிரபாவின் பணிப்புரையில் முல்லை றிஸானாவின் நூல் அறிமுகம்

(கிளிநொச்சி)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பணிப்புரைக்கு அமைவாக முல்லைத்தீவை பிறப்பிடமாகக்கொண்டவரும், தற்போது புத்தளத்தில் வசிக்கும் றிஸானா என்பவரது 'விளையாடுவோம் வாசிப்போம்' என்ற நூல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நேற்று இந்நூலின் அறிமுகவிழா நடைபெற்றது. இதுகுறித்து கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவிக்கையில்,

தமிழீழத் தேசியத் தலைவர் நூல்களை வாசிப்பதில் பெரு விருப்புடையவர். அதேபோன்று எல்லோரும் நூல்களை வாசிக்கவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை உடையவர்.

இந்நூலின் ஆசிரியரான றிஸானா, தனது நூலை வன்னிப் பகுதியில் அறிமுகம் செய்யவேண்டுமென தமிழீழத் தேசியத் தலைவருக்கு கடிதம் அனுப்பியிருந்தார் என தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நூல் அறிமுகம்செய்யும் பொறுப்பினை தமிழீழக் கல்விக் கழகத்திடம் ஒப்படைத்திருந்தார். நாம் இந்நூல் தொடர்பாக மதிப்பீடுசெய்து நல்லநூல் என்ற நிலையில் இவ் அறிமுகவிழாவினை நடத்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் நடைபெற்ற இந்நூல் அறிமுகவிழாவின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றிவைத்தார். அரங்க நிகழ்வுகள் தமிழ்க் கல்விமேம்பாட்டு பேரவைத் தலைவர் வண.பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் நடைபெற்றன. வரவேற்பு உரையினை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை செயலாளர் வ.யோகநாதன் நிகழ்த்தினார்.

நூலின் அறிமுக உரையினை தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நிகழ்த்தினார். நூலின் முதற்பிரதியினை செஞ்சோலைப் பொறுப்பாளர் ந.சுடர்மகள் வழங்க, கிளிநொச்சி தமிழ்ச் சங்க செயலாளர் பரமநாதப்பிள்ளை பெற்றுக்கொண்டார்.

நூலின் மதிப்பீட்டுரைகளை வன்னி ஜி.ரி.சற்றைச் சேர்ந்த செ.செல்வராசா, தமிழீழ தேர்வு ஆணையாளர் க.சரவணபவன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த சி.கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். பதிலுரையினை நூலாசிரியர் நிகழ்த்தினார். (ச)

## யாருக்கு...

பல்வேறு வங்கிக்கணக்கு இலக்கங்களை இணையத்தளத்தில் பல தரப்பட்டவர்கள் வெளியிட்டுள்ளனர். யாரை நிதி சென்றடையுமோ எவருக்கும் தெரியாது.

ஒவ்வொரு நாட்டிலும் கணக்கு இலங்கங்கள், யார் நிதி திரட்டுகிறார்கள், அது யாரை சென்றடையும் என ஒன்றுமே புரியாதுள்ளது. இவ்வாறான விடயங்கள் தொடர்பான விரிவான பட்டியல் ஒன்றைத் தயாரிக்கவுள்ளோம்.

இந்தப் பாரதூரமான விடயம் தொடர்பாக அமைச்சரவையில் பேசினோம் என்றும் அவர் கூறினார். (4)


# பணியாளர்கள் தேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான பணியாளர்கள் தேவை. தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பமுடிவு திகதி 05.02.2005 (ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது)

1. களஞ்சியக் காப்பாளர்
   G.C.E A/L
   கணக்கியல்துறையில் டிப்ளோமா/ தேசிய சான்றிதழ் பயிற்சிபெற்றவர்
   02 வருட வேலை அனுபவம்
2. இலிகிதர்
   G.C.E A/L
   பொது சேவை அனுபவம்
3. கள மேற்பார்வையாளர்
   G.C.E A/L
   பொது சேவை அனுபவம்
   வடமராட்சிப் பகுதியில் குடியிருப்பவர்
   மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம்

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

TRRO Ltd

106, 4 ஆம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம்

(சி-1053)


## பின்லாந்து...

கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவிகளை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவே அவர் இங்கு வருகைதரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## திருகோணமலை...

இக் கலந்துரையாடலுக்கு ஜயந்த விஜயசேகராவை அழைககாது புறக்கணித்தமையை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக ஜே.வி.பி. கூறியுள்ளது.

இதேவேளை அண்மைக்காலமாக ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் முறுகல் நிலை இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)


# விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள சிசில் 60 குளிர்சாதனப் பெட்டியும், லவ் பேட்ஸ் (LOVE BIRDS)களும் விற்பனைக்குண்டு. தொடர்பு:
819/1 மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம். T.P: 222 5401


## இந்திய...

சார்பிலும், அரசின் சார்பிலும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

சுனாமிப்பேரலை இலங்கையைத் தாக்கியவுடன் இந்தியப் படையினரே முதலில் உதவி வழங்க முன்வந்ததாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பின்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராவும் கலந்துகொண்டார். (ச)

## இந்திய இராணுவத்...

இயக்குநராக இருந்த இவர் பூரண விஜய், பராக்ரம் போன்ற முக்கிய இராணுவ நடவடிக்கைகளின்போது இந்திய இராணுவத்தின் மின்னல்வேகப் பிரிவின் தலைமைப் பொறுப்பேற்று செயலபட்டவர் ஆவார்.

சிந்திக்கும் சிப்பாயென வர்ணிக்கப்படும் இவர் இந்திய இராணுவத்தின போர்க்கொள்கை என்ற புத்தகத்தை வெளியிட்டார். இந்திய இராணுவத்தின் 22 ஆவது தலைமைத் தளபதியாக பொறுப்பேற்கும் இவர் ஒரு சீக்கியர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.